வேல்ஸ் பல்கலைக்கழகம்

# வேல்சு சிறகு

சிறகு : 10
இறகு : 16

இதழ் பேசுகிறது...
மாணவ இதழ்

உள்ளத்து அனையது உயர்வு
11. ஏப்ரல் 2025



அகப்பட்ட துளியே மழையாகும்! அடைபட்ட விதையே மரமாகும்! உழப்பட்ட நிலமே பயிராகும்! உடைபட்ட மனமே திடமாகும்! முடியாது என்பது முற்றுப்புள்ளி.!! முடியும் என்பது வெற்றிப்புள்ளி!! என்பதை நிருபித்துக் காட்டும் வல்லமை கொண்டவர்கள் மாணவர்கள்! சங்கடங்கள் வரும்போது தடுமாறாமல், சந்தர்ப்பங்கள் வரும் போது தடம் மாறாமல், மாற்றி யோசனை செய்யாமல் மாற்றங்கள் வருவதில்லை என்பதை உணர்ந்தவர்கள் மாணவர்கள்.. தோல்விகளைக் கேள்விகளாக்கித் தடைகளை உடைத்துத் தடம்பதித்துச் சிகரம் தொடும் இலட்சியத்தோடு வெற்றி நடைபோடுபவர்கள் மாணவர்கள்.

தொழில்நுட்பம் மற்றும் சமூக ஊடகங்களில் தொலைந்து போகாமல் தொழில்நுட்பத் திறமையுடன் அறிவுக்கூர்மையுடன் தெளிவானவர்களாக மாணவர்கள் விளங்குகின்றனர். மேலும், படைப்புகள் உருவாக்குவதிலும் கட்டமைப்பதிலும் மாணவர்கள் சிறந்து விளங்குகிறார்கள். இவர்களின் படைப்பாக்கத் திறன்களை வளர்த்து ஆற்றலை வெளிக்கொணரும் நோக்கில் வெளிவரும் வேல்சு சிறகு முழுக்க மாணவர்களின் பன்முக ஆளுமைகள் நிரம்பி இருப்பதைக் காணலாம்.

வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனத்தைத் தென்னிந்தியாவின் முதன்மைக் கல்வி நிறுவனங்களில் ஒன்றாக உயர்த்தியவர் நம் வேந்தர். அந்த வகையில் விஸ்டாஸ் ஒரு பரந்துபட்ட கலாச்சாரத்தை முன்வைக்கிறது. இங்கு பல்வேறு வகையான சமூக கலாச்சார மற்றும் புவியியல் பின்னணிகளைச் சேர்ந்த மாணவர்கள் ஒன்றாகச் சேர்ந்து படிக்கின்றனர். வேல்ஸ் உலகளாவிய தொழில் நிறுவனங்களின் தேவைக்கு ஏற்ப மாணவர்களை உருவாக்குகிறது. சுற்றுச்சூழலுக்கு ஏற்ற வகையில் பசுமை வளாகத்தை உள்ளடக்கிய பலதரப்பட்ட வசதிகளை வேல்ஸ் கொண்டுள்ளது. மாணவர் மற்றும் ஆசிரியர்களின் ஒவ்வொரு தேவையும் சிறப்பான முறையில் பூர்த்தி செய்யப்படுகிறது.

வேல்ஸ் வேந்தர் டாக்டர் ஐசரி கே கணேஷ் அவர்கள் திரைத்துறையின் நலிந்த கலைஞர்களுக்கு நேரடியாக வங்கிக் கணக்கில் பணம் செலுத்தி வருகிறார். இதன் மூலமாகப் பல்லாயிரக் கணக்கான குடும்பத்தின் துயர்துடைக்கும் சமூகச் சிந்தனையாளராகத் திகழ்கிறார். வேல்ஸ் கட்டணமில்லா கல்வி எனும் திட்டத்தையும் அறிமுகம் செய்துள்ளார். வேல்ஸ் இலவசத் திருமணம் மற்றும் பல்கலைக்கழகம் அமைந்துள்ள பல்லாவரப் பகுதியில் செயல்பட்டுவரும் அரசு பள்ளிகளிலும் அரசு உதவி பெறும் பள்ளியிலும் பயின்று பன்னிரெண்டாம் வகுப்பை நிறைவு செய்த வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ள தந்தையை இழந்த ஏழு மாணவர்களுக்குக் சுட்டணமில்லாமல் கல்வி பயில இலவசக் கல்விக்கான ஆணையை வழங்கியுள்ளார்.

வேல்ஸ் வேந்தர் பெண்களைப் போற்றும் விதமாக ஆண்டுதோறும், சமூகத்தில் சிறந்து விளங்கும் பெண் ஆளுமைகளுக்கு வேல்ஸ் மகளிர் சாதனையாளர் விருதுகளை வழங்கிக் கௌரவப்படுத்தி வருகிறார். வேல்ஸ் நிதியம் வாயிலாக சமூகத்தின் வளரும் இளம் தலைமுறைப் பெண் தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் வகையில் தொடக்க நிலை வித்து நிதியமாக (Seed Money) ரூபாய் இரண்டு இலட்சத்தைக் கொடையாகத் தொடர்ந்து வழங்கிவருகிறார். இந்த வருட மகளிர் தின விருதாளர் விளையாட்டுத் துறையில் கேரம் உலக கோப்பை 2024ல் மூன்று தங்கப் பதக்கங்களை வென்று சாதனை படைத்த காசிமா அவர்களுக்கு அவரது சாதனையைப் போற்றும் வகையில் ரூபாய் 10 இலட்சம் வழங்கிச் சிறப்பித்துள்ளார்.

கல்வித் திருமகன் டாக்டர் ஐசரி கே. கணேஷ் அவர்கள் வேல்சு சிறகு என்னும் மாணவ இதழின் வாயிலாக மாணவப் படைப்பாளர்களை உருவாக்குவதற்கு ஊக்கமளித்து முனைப்புடன் செயலாற்றி வருவது மகிழ்ச்சிக்கும் நன்றிக்கும் உரியதாய் அமைகின்றது.

வேல்சு சிறகு என்னும் மாணவ இதழ் வெளிவருவதற்குப் பெரும் பங்காற்றி வரும் மொழிகள்புல முதல்வர் பேராசிரியர் ப. மகாலிங்கம் அவர்களுக்கும் இவ்விதழில் பங்களிப்பை நல்கி படைப்பாளர்களாக மாறி சிறகை விரித்துப் பறக்கத் துணிந்த மாணவச் செல்வங்களுக்கும் பேராசிரியர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியைப் பரிசாகச் சமர்ப்பிக்கிறேன். பல்கலைக்கழக நிகழ்ச்சிகள் தொடர்பாகப் பல்வேறு நிழற் படங்களைக் கொடுத்துதவிய திரு. ஜோ. ஆண்டனி, திரு. பிரகதீஷ், செல்வன் விஜய், தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் முனைவர் வெ. சிவசங்கர் மற்றும் தமிழ்த்துறைப் பேராசிரியர்கள், பிற துறைப் பேராசிரியர்கள், மாணவச் செல்வங்கள் ஆகியோருக்கு இத்தருணத்தில் என்னுடைய மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

முனைவர் **தே தேன்மொழி**
பொறுப்பாசிரியர் - வேல்சு சிறகு



# வேல்ஸ் பல்கலைக்கழக வாழ்த்துப் பாடல்


பேராசிரியர் முனைவர் **ப.மகாலிங்கம்**
புல முதல்வர், மொழிகள் புலம்
வேல்ஸ் பல்கலைக்கழகம்


ஆர்த்திடும் அலைகடல் ஞானத் திருக்கோயில் வாழிய வாழியவே!
கீர்த்திமிகு நம் வேல்ஸ் பல்கலைக்கழகம் வாழிய வாழியவே!

ஆயிரம் ஆயிரம் பல்திசை மாணவர் நாடி
ஆளுமை பெற்றிடும் சங்கமச் சமுத்திரம்!
பாயிரப் புகழ் மைந்தர் கணேச வள்ளல்தம்
தந்தை வேலனார் நினைவில் நிமிர்ந்த கல்வி இமயம்! வாழிய வாழியவே!

பன்னோக்கில் மின்னேர் பொறியியல் மருத்துவம் சட்டம் வணிகம்
அறிவியல் ஆய்வு எனவளர்
கல்வி நூறெனு அணிசெயப் புதுமைக் கனிந்திடும் வேல்ஸ் பல்கலைக்கழகம்!
பன்னாடும் பாரதமும் தமிழ்நாடும் இருபால் மாணவத்தால்
இணைந்து நிற்க மண்ணில் தெரியுது வேல்ஸ் வானம்! வாழிய வாழியவே!

சமநீதி சமூகநீதி மனிதம் போற்றும் மூச்சுக் காற்றால்
சாதனை படைக்கும் நம்பிக்கைப் பூஞ்சோலை! வாழிய வாழியவே!

அன்னை வேல்ஸ் வளர்த்த மாணவச் செல்வங்கள்
சமுதாய வானமெங்கும் மின்னும் நட்சத்திரங்கள்!
மேன்மை விளைத்திடும் வேல்ஸ் எனும் பல்கலைக் குடும்பம்
கால்கொண்டதுவோ சென்னைப் பல்லாவரத்தில்!
புத்தெழில் தாழம்பூரில் மணம் பரப்பிப் புது உதயத் தெலுங்கானாவில் படர்ந்தோங்கி,
நானிலம் போற்றிட இந்தியமாக வளரக் காண்போம்! வளரக் காண்போம்!

நித்தமும் புதிதாய்ப் பிறந்திடும்
நித்தமும் புதிதாய் வளர்ந்திடும்
வித்தக மாணவர் அறிவு எழுச்சியின்

ஒப்பிலா வேல்ஸ் கலைக்கூடம்!
ஒப்பிலா வேல்ஸ் கலைக்கூடம்!
ஒப்பிலா வேல்ஸ் கலைக்கூடம்!

# ஆருயிர் தோழியே





**கா. சத்திய பிரகாஷ்**
முதலாம் ஆண்டு,
இளங்கலை வணிக மேலாண்மை

ஆருயிர் தோழியே ஆழ்கிறேன் நான் உனில்
அடையாளம் யாவையும் துறந்திடு நீ எனில்
ஆழ்கடல் முழ்கிடும் முத்தாய் ஆகிறேன்
அடைக்கலம் தேடி  நான் உன்னை நாடுகிறேன்

தாய் மொழியேதும் எனக்கில்லை
தாயாய் உன்னைப் பார்க்கிறேன்
மனதில் மாயம் செய்து என்னுள்
இன்பம் சேர்க்கிறாய்

அல்லும் பகலுமே அலையாய் மாறி அலைந்திடுவேன்
அகிலம்யாவையும் காலால் நானும் அளந்திடுவேன்
எல்லையற்ற வானைப்போலத் தூரம் தாண்டிச் சென்றிடுவேன்

வழிகாட்ட வரைபடம் வேண்டாம்
ஒளி மீட்டச் சூரியன்  வேண்டாம்
அன்பின் அடைக்கலம் போதுமே

மரம் தருகின்ற நிழலைப் போலவே
மனம் படைத்த இதயம் போதுமே
நாள் தோறும் இன்பம் சேர்க்குமே

ஓர் அறிவு முதல் ஆறறிவு வரை ஒன்றெனப் பார்ப்பேன்
குயிலின் கூவலைத் தாண்டிய பாடலைத் தேடுவேன்
புரியாப் புதிரைச் சேரும் ஓர் விடையைத் தினமும் ஈட்டுவேன்

காற்றுடன் காற்றாய்க் கலந்து
பறக்கின்ற தூசைப் போல
துணிவாக முன்னே செல்வேனே

கரையோடு கையைக் கோர்த்து
கடல் சேரும் நதியைப் போல்
தூரங்கள் நானும்
கடப்பேனே!

**க. வர்ஷா**
ஃபார்ம் டி, 5ஆம் ஆண்டு,
மருந்தியல் புலம், விஸ்டாஸ்.



# கனவின் கவிதை

நிலா தேடி சென்றேன் நிழல் பாதையில்,
நிமிடங்கள் சொற்களாய் விரிந்த போதையில்.
பிரளய மழையில் எழுந்து நின்று,
பதியிற்றேன் வரிகளாய் மனம் கொண்ட முத்தம்!
காற்றில் உரசும் ஓசை கவிதை ஆனது,
நிழலில் ஒளிந்த கனவு வெளிச்சமாயிற்று.
சொற்களின் தீபம் ஏற்றிய போதும்,
எழுத்தில் மட்டும் மூச்சு விட்டேன்!
கவிதை எனது உயிரின் உருவம்,
கனவு எனது உள்ளத்தின் வெளிச்சம்!
காலம் கரைந்து போனாலும்,
என் வரிகள் என்றும் அழியாது!

---



**மு. இஸ்மாயில்**
இளங்கலை கணினிப் பயன்பாடு
முதலாம் ஆண்டு.
விஸ்டாஸ்.

ஒவ்வொரு நாளும் எனைக் குத்தி
கூறுபோடும் நிஜம் அது....!
நான் இன்னும் சாதனை சத்தம்
கேட்காத சராசரி பெண்...!
- இப்படிக்கு அவள்!





**ஏ.சஞ்சனா,**
அசைவுச் சித்திரம் துறை, 2 ம் ஆண்டு



**எம். நித்யா**
முதலாம் ஆண்டு
கல்வியியல் துறை

# தாய்மொழியின் சிறப்புகள்

## முன்னுரை

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனி சிறந்தனவே" என்றார் பாரதியார். பெற்ற தாயைவிடச் சிறந்தது தாய்மொழியாகும். எந்நாட்டவராக இருப்பினும் அவரவர் தாய்மொழியிலேயே கல்வி கற்பதுதான் மிகச் சிறந்ததாகும்.

## தாய்மொழியின் சிறப்புகள்

"சிந்தனையை வளர்த்து, வாழ்வோடு வாழ்வாக இரண்டறக் கலந்து நிற்பது தாய்மொழியே." தமிழ்மொழியின் வாயிலாகவே சமூக மரபுகளையும் பழக்க வழக்கங்களையும் நன்கு உணரமுடிகிறது. தமிழ்மொழி வாயிலாகவே அடிப்படைத் திறன்களையும் படைப்பாற்றல் திறனையும் மிக எளிதில் பெறமுடியும். தாய்மொழி மூலமாகத்தான் மனத்தில் தோன்றும் கருத்துகளை, எண்ணங்களை, உணர்ச்சிகளை வெளிப்படுத்த முடியும். சொல்ல விரும்பும் கருத்தை மற்றவர்களுக்குப் புரியும்படி, எழுத்து மூலமாகவோ பேச்சு மூலமாகவோ தெளிவாக உணர்த்தத் தாய்மொழி உதவுகிறது. இன்றைய நாளில் கூட்டங்கள், மாநாடுகள், தாய்மொழியிலேயே நடைபெறுகின்றன. சட்டமன்ற நிகழ்வுகளும் தமிழிலேயே நடைபெறுகின்றன.

"குழலினிது யாழினிது என்ப தம் மக்கள் மழலைச்சொல் கேளாதவர்"

குழல், யாழ்,மழலை ஆகிய சொற்களின் பொருட் சிறப்பினையும், தமிழ் மொழியின் இனிமையையும் இக்குறட்பா வழி அறிந்து கொள்ளலாம்.

## தாய்மொழி வழிக் கல்வியின் சிறப்பு

தாய்மொழியிலேயே கல்வி கற்க வேண்டும் என்று கூறுவதனால் பிற மொழிகளைக் கற்கக் கூடாது என்பது பொருள் அல்ல. எத்தனை மொழிகளை வேண்டுமானாலும் கற்கலாம். ஆனால் கல்வி என்பது தாய்மொழி வழியாக மட்டுமே கற்பிக்கப்பட வேண்டும் என்று காந்தியடிகள் வலியுறுத்திக் கூறிவந்தார்.

"தாய்மொழியில் கல்வி கற்பிக்கப்பட்டிருந்தால், நம்மிடையே பல சுபாஷ் சந்திரபோஸ்களும், பி.சி.ராய்களும் தோன்றியிருப்பார்கள்" என்று காந்தியடிகள் கூறி வருத்தப்பட்டார். மனிதர்களின் சிந்தனையும் கற்பனையும் தாய்மொழியில் தான் உருவாகின்றன. எனவே மாணவர்களின் சிந்தனை வளர்ச்சிக்குத் தேவை தாய்மொழி வழிக் கல்வி ஆகும்.

### தாய்மொழியில் அறிவியல் கல்வி

ஜப்பான், ஜெர்மனி, ரஷ்யா போன்ற அயல்நாட்டு மக்கள் அந்நிய மொழியைப் புறக்கணித்துத் தாய்மொழிக்கு முக்கியத்துவம் கொடுத்துத் தாய்மொழியிலேயே கல்வி பயின்றதால்தான் இன்று உலக மேதைகளாக இருக்கின்றனர். புதுப்புது அறிவியல் சாதனங்களை உருவாக்குவதிலிருந்து கோள்களை ஆராய்ச்சி செய்வது வரை அவர்கள் உலக அரங்கில் புகழ் பெற்றுள்ளனர்.

தமிழ்மொழியில் அறிவியலைப் போதிப்பதற்கான கலைச்சொற்கள் அதிகம் இல்லையென்று ஒருசிலர் கூறுகின்றனர். அது தவறான கூற்று. புதியவற்றைக் கண்டுபிடிக்க வேண்டும்; புதிய கலைச் சொற்களைத் தமிழில் உருவாக்க வேண்டும்.

உலகிலுள்ள பிற நாடுகளில் எல்லாம் அறிவியலை அவரவர் தாய்மொழியிலேயே கற்கின்றனர். அவர்கள் மொழியிலெல்லாம் அறிவியலுக்கான கலைச் சொற்கள் இருக்கும்போது உலகின் தொன்மை மொழியான உயர் தனிச் செம்மொழியான நம் தாய்மொழியில் கலைச் சொற்களை உருவாக்குவது கடினமல்லவே.

### முடிவுரை


‘‘யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவ தெங்கும் காணோம்’’ என்று பாரதி கூறியுள்ளார். பல மொழிகளைக் கற்றறிந்தவர் பாரதியார். அவர்கள் கற்ற அத்தனை மொழிகளிலும் இனிமை இல்லையென்றும் தன் தாய்மொழியான தமிழ்மொழியில்தான் இனிமை உள்ளது என்றும் பாரதி கூறியுள்ளார். தன் தாய்மொழியின் மீது இருந்த பற்றினையும் உயர்வினையும் எவ்வளவு அழகாக அவர் வெளிப்படுத்தியுள்ளார். உலகிலுள்ள மற்ற நாடுகள் தாய் மொழியில் கல்வி கற்றுச் சிறந்து விளங்குவது போல, நம் நாடும் தாய்மொழியில் கல்வி பெற்றுச் சாதனைகள் பல படைக்க வேண்டும். நன்றி வணக்கம்! (தாய் மொழித் தினக் கட்டுரை 21.02.2025 - முதல் பரிசு)

---





செல்வி **தனலட்சுமி**
கணினிப் பயன்பாடு -
தகவல் தொழில்நுட்பவியல்
இரண்டாம் ஆண்டு
விஸ்டாஸ்





முனைவர் **தே தேன்மொழி**
உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை, விஸ்டாஸ்.

# நாளைய விடியல் நமதாகட்டும்

**தொ**டரும் பகலில்
விடியாத இரவுகளில்
காயங்கள் இல்லாமல்
காலத்தைக் கடக்காமல்
காயத்தோடு வாழாமல்
உறக்கம் இல்லா இரவுகளில்
உணவு இல்லாப் பசித்த வயிறுகளில்
உதவி இல்லா உறவுகளில்
மனிதம் இல்லா மனிதர்களில்
இரக்கம் இல்லாத் துன்பங்களில்
அன்பு இல்லாச் சோர்வுகளில்
வாழ்வு இல்லா உலகில்
விடியல் இல்லாச் சூட்சுமத்தில்
மாற்றம் பல வந்தாலும்,
மனிதர் பலர் மடிந்தாலும்,
மண்ணில் இரத்தம் வழிந்தாலும்,
காலம் கடந்து கழிந்தாலும்
வரப்போகும் ராஜமகுடத்திற்காகப்
புலராத இரவுகளில்
புரியாத கனவுகளோடு வரும்
பிரகாசமான எதிர்காலத்திற்காக..
மெல்லப் பரவும் ஒளியில்
பிரசவமாகும் விடியலில்
நிறைவு பெற்ற மனதில்
நிலைத்திருக்கும் வலியில்
ஏற்றங்களும் ஏமாற்றங்களும்
மாற்றங்களாகி மாறுதலாகிப்போகட்டும்!
எங்கள் விடியலுக்காக என்றும்
பொறுமையாகக் காத்திருப்போம்
விடியட்டும் விடியல்;
விழுந்தே பிறக்கட்டும் உதயம்;
வடியட்டும் சோகங்கள்;
முடியட்டும் குரோதங்கள்;
தொடரட்டும் உறவுகள்
தொழுவட்டும் விடியலைக் கரங்கள்
விலகிச்செல்லும் மேகங்களாய்
கடந்துபோகும் நேரங்கள் நகரட்டும்
விரைவில் விடியல் நமதாகட்டும்
நாளைய விடியல் நமதாகட்டும்!

■




# பன்னாட்டில் வலம் வரும் தொல் தமிழ்மொழி

அ. அபிராமி.
சட்டத்துறை, முன்றாம் ஆண்டு, வேல்ஸ் பல்கலைக் கழகம்



## முன்னுரை

ஆதியில் தோன்றிய தொன்மொழி! ஈடில்லாத் தொன்மை மொழி! முன் தோன்றிய மூத்த மொழி! காலத்தை வென்ற மொழி! செங்கோல் ஈன்ற மொழி!

- என் தமிழ் மொழி இதோ அதன் சிறப்புகள்...

தமிழ் மொழி உலகின் பழமையான மொழிகளில் ஒன்றாகும். உலகின் மிகப் பழமையான மொழிகளில் ஒன்றாகக் கருதப்படும் தமிழ், இலக்கிய பண்பாடு, பண்பாட்டு மரபுகள், மற்றும் அறிவியல் வளர்ச்சிகளில் முக்கிய பங்காற்றியுள்ளது.

தமிழ் மொழியின் பழமை சுமார் 2000 ஆண்டுகளுக்கு மேல் வரலாற்றைக் கொண்டது சங்க கால இலக்கியங்கள் தமிழின் சிறப்பை உலகிற்குக் காட்டுகின்றன. திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற நூல்கள் இதற்குச் சான்றாகும். இலக்கியமும், இலக்கணமும் கொண்டுக் காலத்தை வென்றுப் பல நூற்றாண்டுகள் கடந்து இன்றும் இனிமை குறையாமல் கற்போர் நெஞ்சத்தை நெகிழச் செய்யும் அருந்தமிழ்ச் சிறப்பினை வார்த்தைகளால் சொல்ல இயலாது. "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்"என்று பாரதியார் கூறியது நினைவு கூரத்தக்கது.

## இலக்கியச் செழுமை

தமிழ் மொழி இலக்கியத்தில் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, போன்ற சங்க இலக்கியங்கள், பின்னர் தேவாரம், திருவாசகம் போன்ற பக்தி இலக்கியங்கள் மற்றும் பாரதியாரின் கவிதைகள் போன்றவை தமிழ் மொழியின் வலிமையை நிரூபிக்கின்றன.

தமிழ் மொழி அமைப்பு மிகவும் தனித்துவமானது. எழுத்துகளின் ஒலி, உருவம் மற்றும் பாய்ச்சல் அனைத்தும் அழகுடன் அமைந்துள்ளன. உயிர் எழுத்துகள், மெய்யெழுத்துக்கள் ஆகியவை இணைந்து, தமிழ்மொழியைச் சிறப்பாக உருவாக்குகின்றன. அதுமட்டுமின்றி தமிழில் அறிவியல் மற்றும் கணித பரிமாணங்களும் காணப்படுகின்றன. தமிழ் இலக்கணத்தில் ''யாப்பு, அணி, சொல், வெண்பா'' போன்றவைக் கட்டமைப்பில் துல்லியத்தைக் காட்டுகின்றன. சங்க காலம் சொல்லும் வரலாறு, திருக்குறள் பாடும் நல்வழி பாராட்டு அறமும், பொருளும், இன்பமும் கொண்டு அறிவின் ஆலயமாம் தமிழ் எனும் சொல் பிறந்தது.

## உலகளாவிய தமிழ் மொழி

தமிழ் இந்தியாவின் தமிழ்நாடு மாநிலத்தில் மட்டுமல்ல, அது உணர்வுகளையும், அறிவையும், அறத்தையும் உணர்த்தும் ஒரு பெரும் பன்னாட்டு மொழியாகும். தமிழ் ஒரு செம்மொழியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 'தகர வரிசையில் அமைந்த தமிழ் மொழியின் இனிமையான கவிதை

தத்தித் தாதுதிதி
தாதுதி தத்துதி

துத்தித்து தைத்து
தைதத்தா தாதுதி
தித்தித்த தித்தித்த தாதெது
தித்தித்த தெத்தாதோ
தித்தித்த தாது.

தத்தித் தாவிப் பறந்து பூக்களில் உள்ள தேன் துளியாகிய தாதுவை உண்கிற வண்டே.. ஒரு பூவினுள் உள்ள தேன் துளியாகிய தாதுவை உண்ட பின் வேறொடு பூவினுள் உள்ள தாதுவை எடுத்து உண்கிறாய். உனக்கு எந்தப் பூவினுள் உள்ள தாது (தேன்) இனித்தது?

இக்கவிதையின் மொழி ஆற்றல், எந்த மொழியிலும் இடம் பெற முடியாத வார்த்தைகளின் வலிமை மற்றும் திறன் வேறு எந்த மொழியினாலும் ஈடுசெய்யமுடியாத இலக்கண அழகு. அது தமிழுக்கே உரிதான மொழி நம்தமிழ் மொழி.

காலம் பல மாறினாலும் கண்டம் பல அழிந்தாலும் அழியாத சிறப்புடைய மொழியாகத் தமிழ் மொழி திகழ்கிறது. இயல், இசை, நாடகம், எனும் முத்தமிழாய் வளர்ந்து. கன்னித் தமிழாய், செந்தமிழாய், வண்டமிழாய் பைந்தமிழாய் வளம் வரும் ஒரே மொழி தமிழ் மொழியாகும். எண்ணற்ற புலவர்களாலும், அரசர்களாலும் சங்கம் வைத்து நடத்தப்பட்ட ஒரே மொழி தமிழ்மொழியாகும்.

**முடிவுரை**

தமிழ் மொழி ஒரு கலாச்சராக் கருவூலம் மட்டுமல்ல, அது உணர்வுகளையும், அறிவையும் அறத்தையும் உணர்த்தும் ஒரு பெரும் பன்னாட்டு மொழியாகும். தமிழ் மொழியின் பெருமையைக் காக்க நாம் அனைவரும் கடமைப்பட்டுள்ளோம்.

உலகின் மூலை முடுக்கிலும் ஓங்கும், தமிழ் எங்கள் தூய மனதில் வாழும் செம்மொழி என்று பெறும் பெருமை சிந்தனை சீரில் ஒலிக்கும் அருமை. தமிழே என் வலிமை நெஞ்சம் தரணியில் வாழும் மொழிகளின் செம்பொன். வாழ்க தமிழ்! வளர்க தமிழ்! மண்ணும், மணமும் தமிழ் வாழ்த்தும்...!

(தாய் மொழித் தினக் கட்டுரை 21.02.2025 - இரண்டாம் பரிசு)






செல்வி. **பி. தீபிகா**.
இளங்கலை வான்பரப்பியல்,
முதலாம் ஆண்டு
வேல்ஸ் பல்கலைக் கழகம்



# வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்




செல்வி. **பா.சு. ஸ்ரீஜிஷா**

இளங்கலை வான்பரப்பியல்

முதலாம் ஆண்டு

விஸ்டாஸ்




# அம்மா




**பிரியங்கா தாமோதரன் நிர்மலா**


சட்டத்துறை

விஸ்டாஸ்


*வார்த்தைகளே இல்லாத வடிவம்,*
*அளவுகோலே இல்லாத அன்பு,*
*சுயநலம் இல்லாத இதயம்,*
*அவள் தான் அம்மா.....!*




**பிரதீபா. க.,**
இளங்கலை கணினிப் பயன்பாடு,
தகவல் தொழில்நுட்பவியல்
இரண்டாம் ஆண்டு

# செந்தமிழின் இனிமையும் வளமையும்

## முன்னுரை

இலக்கியமும், இலக்கணமும் கொண்டு காலத்தை வென்று பல்வேறு நூற்றாண்டுகள் கடந்து இன்றும் இனிமை குறையாமல் கற்போர் நெஞ்சத்தை நெகிழச் செய்யும் அருந்தமிழ் சிறப்பினை வார்த்தைகளால் சொல்ல இயலாது. "கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன் தோன்றிய மூத்தக் குடி! எம் தமிழ் குடி!" தமிழின் சிறப்பைப் போற்றி பாடியவர்கள் எண்ணிக்கை எண்ணில் அடங்கா." தமிழுக்கும் அமுதென்று பேர், அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்று பாரதிதாசன் பாடியுள்ளார். "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்று பாரதியார் கூறுகிறார். இத்தகைய தமிழ் மொழியின் சிறப்புக்கள் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

## தமிழ் மொழியின் தொன்மை

செம்மொழியாகத் தமிழ் உயர்ந்து நிற்பதற்கு முக்கிய காரணம் அதன் தொன்மைத் தன்மையே ஆகும். தமிழ் மொழி மிக நீண்ட நெடிய வரலாற்றை அடிப்படையாகக் கொண்டது.

உலகில் பல மொழிகள் தோன்றி மறைந்தொழிந்தன என்று மொழியியல் அறிஞர்கள் கருத்துரைத்துள்ளனர். கால மாற்றத்திற்கேற்ப புத்தம் புது மொழிகளும் தோன்றி வளர்ந்து வருகின்றன.

சொல்லொன்றை உயிர் ஓவியமாய் யுகமதில் வாழும் காவியமாய் சிந்தனையைக் கடைந்து படைத்து தீட்டிட்ட தொன்மை மொழி!...

இவ்வாறு தோன்றி மாயும் மொழிகளுக்கிடையே, மிகப் பழங்காலத்திலேயே தோன்றி, செல்வாக்குடன் வளர்ந்து, இன்றளவும் வாழ்ந்து தமிழ்மொழி வளர்ந்து நிற்கின்றது.

## தமிழ் மொழியின் சிறப்புகள்

தமிழின் ஒவ்வொரு எழுத்தும் கவிதை! தமிழின் ஒவ்வொரு வார்த்தையும் சங்கீதம்!"

பழமைக்கும் பழமையாய் இலக்கிய வளமுடையதாய் நிற்பதோடு புதுமைக்கும் புதுமையாய் கருத்துச் செல்வம் நிறைந்ததாய் என்றும் இளமைப் பொலிவுடன் விளங்குவது தமிழ் மொழியாகும்.

உயர்தனிச் செம்மொழியாக விளங்கும் தமிழுக்கு உலகிலேயே மொழிக்கென முதன் முதலாகத் தமிழ்ச் சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. இந்திய அரசியல் சாசனத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மொழிகள் 14 மட்டுமே. அவற்றில் தமிழும் ஒன்று. தமிழ் நாட்டில் மட்டுமல்லாது உலகம் முழுவதும் தமிழ் மொழி சிறந்து விளங்குகின்றது. தமிழ் மொழி தனித்து இயங்கக் கூடிய மொழியாகும்.

## எளிமைச் சிறப்பு

தமிழ்மொழியானது எழுதவும் படிக்கவும் பேசவும் மிகவும் எளிதானது. இதனாலேயே தமிழ் இனிய தமிழ் என்பதோடு, எளிய தமிழ் எனவும் கூறப்பெறுகிறது. இச்சிறப்பைப் பிற

மொழிகளிற் காண இயலாது. தமிழ் எழுத்துக்கள் ஒரே ஒலியானதால் எவரும் எதையும் படிக்க முடியும் உயிரெழுத்து, மெய்யெழுத்து, கூட்டெழுத்து ஆகிய அனைத்தும் சேர்ந்து மொத்தம் 247 எழுத்துக்களே! "தமிழ் வாழும் வரை தமிழர் வீழ்வதில்லை!" தமிழ் நூல்களைப் படிக்காமல் வாழ்ந்தால் வாழ்வில் நிறைவு இல்லை!

### தமிழ் மொழியின் சிறப்புப் பெயர்கள்

செந்தமிழ், பைந்தமிழ், அருந்தமிழ், நறுந்தமிழ், தீந்தமிழ், முத்தமிழ், ஒண்டமிழ், தண்டமிழ், வண்டமிழ், தெளிதமிழ், இன்றமிழ், தென்றமிழ், நற்றமிழ், தெய்வத்தமிழ், மூவாத்தமிழ், கன்னித்தமிழ்.

### தமிழ் இலக்கிய வளமை

உலக இலக்கியங்களில் முதன்மையானது சங்க இலக்கியங்கள். பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினென்கீழ்க்கணக்கு நூல்கள் இன்றளவும் தமிழ்மொழியின் இலக்கிய வளத்திற்கு இன்பம் சேர்க்கின்றன. தமிழ் மொழியில் உள்ள இலக்கியங்களைப் போல வளமையான, செழுமையான இலக்கியங்கள் உலகிலுள்ள வேறெந்த மொழியிலும் இல்லை என பேரறிஞர் கமில்சுவலபில் கூறியுள்ளார். இலக்கியங்களை வைத்துதான் அம்மொழியின் செழுமையை அறிய முடியும்.

### தமிழ் இலக்கண வளம்

ஒரு மொழியின் இலக்கண வளமே பற்பல இலக்கியங்கள் படைக்க முன்னோடியாக திகழ்வதற்கு வழிவகுக்கும். தமிழ் மொழியின் தொன்மையான இலக்கண நூல் தொல்காப்பியம் ஆகும். நன்னூல், தண்டியலங்காரம், சதுரகராதி போன்ற இலக்கண நூல்கள் தமிழ்மொழிக்கு அணிகலன்களாய் அழகு சேர்கின்றன.

### முடிவுரை

தமிழ் இனிய மொழி இலக்கிய, இலக்கணச் சிறப்புடைய மொழி, இத்தகைய தமிழ் மொழியை வளப்படுத்த வேண்டுமானால் பிறநாட்டிலுள்ள சிறந்த அறிஞர்களின் நூல்களைத் தமிழில் பெயர்த்து எழுதவேண்டும். மேலும் புகழ் தரக்கூடிய நல்ல நூல்களைப் படைக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறார் பாரதி. பாரதியின் இத்தகைய வேண்டுகோளை நாம் நிறைவேற்ற வேண்டும். நம் தாய் மொழியாம் தமிழ்மொழியை அதன் சிறப்புக்கள் என்றும் மங்காது பேணிக்காப்பது நம் அனைவரது தலையாய கடமையாகும். (தாய் மொழித் தினக் கட்டுரை 21.02.2025 - மூன்றாம் பரிசு)









முனைவர் **செ.மார்கண்டன்**
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
விஸ்டாஸ்.

# வீரமும் - போரும் புறத்திணை

பழந்தமிழர் வாழ்வியலை இரு கூறாப் பிரித்துள்ளார். அவை, அகம், புறம் என்பனவாகும். அக ஒழுக்கங்களைத் தவிர்த்த அனைத்தும் புற வயப்பட்டவையாகும். சமயம், கல்வி, கொடை என இதன் பட்டியல் நீளமானது. எனவே, புறத்தினையின் ஒரு சிறுபகுதியே வீரமும் போரும் ஆகும். ஆனால், புறத்திணையில் வீரமும் போரும் அடக்கம் என்பது ஆய்வுலகம் அறிந்த உண்மையாகும்.

**வினாவும்-விவாதமும்**

**தனிநபர் சண்டை எப்படி போராகும்?**

தனிநபரின் கூட்டமைப்பே இச்சமூக உருவாக்கம். தனி நபர் வாழ்வியல் பின்பு இனக்குழு சமூகமாக மாறியது. இனக்குழுக்களின் பகையும், ஆசைகளுமே அரசு உருவாக காரணமாக அமைந்ததை இத்தமிழ்ச் சமூகம் நன்கு அறியும்.

கள் (மதுபானம்) குடிக்கச் செல்லும் இடங்களில் இரு நபர்களுக்கு இடையே வாக்குவாதம் முற்றிச் சண்டையாக மாறி, அவர்களைச் சார்ந்த நண்பர்களைக் கடந்து ஊர்ச் சண்டையாக மாறுவது சமூகக் கள எதார்த்தம். இந்த ஊர்ச் சண்டைதான் போருக்கான அடிநாதமாக அமைகிறது.

**ஆநிரை கவர்தல் சண்டை- போர்**

ஆநிரைகள்தான் பழங்காலச் செல்வங்கள். மாற்றானுடைய ஆநிரைகளை ஒருவர் கவர்ந்து செல்ல, அவரைத் தடுத்துத் தன் ஆநிரைகளைக் காப்பாற்ற, ஆநிரைகளின் உரிமையாளன் ஒருவன் தானே சண்டையிட, அல்லது தடுக்க வந்திருக்க முடியும். பிறகே, தன் சுற்றத்தையும், இனக்குழுவையும் சேர்த்துக் கொண்டு சென்று ஆநிரையை மீட்பது தானே தமிழர் மரபு. தனிநபர் சண்டை போருக்கான அடித்தளம் என்பதை உலக யுத்த வரலாறுகள் முன்வைக்கும் உண்மையாகும்.

- **இரண்டாம் உலகப்போர் நிகழத் தனிநபர் ஒருவர் காரணம் என்பதை வரலாற்றைப் படித்துப் புரிந்துகொள்ளலாம். - அடால்ஃப்ஹிட்லர்**
- **பிரெஞ்சுப் புரட்சிக்கு ஒற்றை மனிதரின் உரிமைக் குரலான. "தாய்" நாவல் தானே காரணம். - மார்க்ஸிம் கார்க்கி**

சிலப்பதிகாரம் எழுதப்பட்ட காலம் வேறு; தொல்காப்பியம் எழுத்தப்பட்ட காலம் வேறு; புறப்பொருள் வெண்பாமாலை எழுத்தப்பட்ட காலம் வேறு; மேலும், இந்நூல்களுக்குச் சான்றாக கல்வெட்டு, செப்பேடு, ஓலைச்சுவடி, பிற்கால அவிப்பலி குறித்தச் செய்தித்தாள் தரவு இவற்றை ஒப்பிட்டு ஆராய்வது எப்படி முறையான ஆய்வாகும்?

இதற்கு விளக்கம், தமிழ் ஆய்வு வரலாறு பல நூறு ஆண்டுகளாக இந்தச் சான்றுகளை முன் வைத்துத்தானே ஆய்வு நிகழ்த்தி வருகிறது. இந்தக் கேள்விக்கு ஆய்வு நூலில் இருந்தே சான்றினை முன்வைக்க விரும்புகிறேன். தமிழ் ஆய்வுலகம் நன்கு அறிந்த சிலப்பதிகார ஆய்வாளர் சிலம்பொலி செல்லப்பனார் அவர்களின் சிலம்பொலி என்ற ஆய்வு நூல் கருத்தை இங்கே கவனிக்கலாம்.

"செல்லப்பனார் சிலம்பிலிருந்து தொடங்கும் பயணத்தில் நம்மையும் சேர்த்துக் கொண்டு சிலம்பிற்கு முன்னெழுந்த சங்கப் பாடல் உலகிற்கும் சிலம்பிற்குப் பின்வந்த நீண்ட தமிழ் இலக்கிய உலகிற்கும் செல்வதும் வருவதும் ஆகிய நீண்ட நெடும் பயணம் இன்பம் தருவது; அறிவைப் பெருக்குவது" என்று முன்னாள் செம்மொழி இயக்குனர் மருதநாயகம் 'சிலம்பொலி' நூலின் அணிந்துரையில் சிலம்பொலியாரின் ஆய்வுநெறியை முன்வைப்பது கவனிக்கத்தக்கது.

மதுரைக் கோட்டையின் மீதுள்ள கொடி கோவலன் கண்ணகியை 'வாராதீர்' என்று தடுப்பது போல் அசைந்தாடியது என்று இளங்கோ தற்குறிப்பேற்ற அணியை எடுத்தாள்வார். இளங்கோ வழியில் கம்பனும் வில்லிப்புத்தூராரும் செயல்படுவர் என்பதை இரண்டு மேற்கோள் காட்டி நிறுவுவார் ஆசிரியர்.

"போர் உழந்து எடுத்த ஆர்எயில் நெடுங்கொடி வாரல் என்பனபோல் மறித்துக் கைகாட்ட" (சிலம்பு, புறஞ்சேரி, 189-90)

"மையறு மலரின் நீங்கி யான்செய் மாதவத்தின் வந்து செய்யவள் இருந்தாள் என்று செழுமணிக் கொடிகள் என்னும் கைகளை நீட்டி அந்தக் கடிநகர் கமலச் செங்கண் ஐயனை ஒல்லைவா என்றழைப்பது போன்ற தம்மா." (கம்ப. பாவ. மிதிலைக் காட்சி 1) (சிலம்பொலி செல்லப்பனார்;சிலம்பொலி; 1918;34)இவ்வாறு ஒரு மூலத்தரவிற்கு பல காலக்கட்டங்களில் தோன்றிய சான்றாதாரங்களை முன்வைப்பது ஆய்வு அடிப்படை மரபாகும்.தவிர்த்து ஒரே காலத்தில் தோன்றிய மூலப்பனுவலைச் சார்ந்து, சான்றாதாரமும் மூலப்பனுவலின் காலத்தை ஒத்தே இருக்க வேண்டும் என்றால் தமிழாய்வுலகில் எந்த ஆய்வும் வந்திருக்க முடியாது.

தொல்தமிழர் வரலாற்றை அறிய அக்கால ஆவணங்களாகிய இலக்கியப் பனுவல்களும், கல்வெட்டுகளும், சாசனங்களும், நாணயங்களும் துணைபுரிகின்றன. தமிழியல் ஆய்வுக்கு இலக்கியச் சான்றுகளோடு, பிற ஆவணச் சான்றுகளையும் இணைத்து நோக்கும்பொழுது மொழியின் தொன்மையும், மக்களின் வாழ்க்கைத் தன்மையும் நன்கு புலப்படும். நவீன ஆய்வாளர்கள் இலக்கியச் சான்றுகளை மட்டும் வைத்து நோக்குவதன் நம்பகத்தன்மையைக் கேள்விக்குட்படுத்துபவர்களாக இருக்கின்றனர் .அதனால், புறச்சான்றுகள் உள்ள ஒரு இலக்கியக் கூற்றுகளை எடுத்து வைப்பது அவசியமாகும்.


கல்வெட்டின் வாயிலாகக் கால வரையறை செய்ய முயன்றவர்களில் குறிப்பிடத்தக்கவர், சதாசிவ பண்டாரத்தார்,ச.வையாபுரிப்பிள்ளை,மயிலை சீனி வேங்கடசாமி மற்றும் ஔவை சு.துரைசாமிப்பிள்ளை அவர்களை முன்வைக்கலாம். உரைகளைத் தெளிவுபடுத்த வந்த ஔவை சு.துரைசாமிப்பிள்ளை தவறாது வரலாற்றைக் கட்டமைக்க கல்வெட்டைத் தேர்ந்தெடுத்தார்.இதன் காரணமாகவே இவரின் உரை வேறுபட்டு, காலத்தால் நிலைபெற்று நிற்கிறது .

**நன்னன் - ஊர்பெயராய்வு**

நான்காம் பத்தின் நாயகனாக விளங்குபவர் நன்னன். நன்னன் என்ற மன்னன் வாழ்ந்த பகுதி நன்னனூர் என்று வழங்கப்பட்டது. நன்னனூர் இப்பொழுது ஆனைமலை என்ற பெயரால் வழங்கப்படுவதாகக் கல்வெட்டுத் தரவுகள் கூறுகின்றன. சில ஊர்களின் பெயர்கள் திரிந்து இருப்பதையும் காணமுடிகிறது. ஆனால் இவ்வூர் முழுமையாக மாறி இருப்பதைக் கல்வெட்டுப் பதிவு செய்திருக்கிறது.

"இந்த நன்னன் வசமிருந்த சேரநாட்டுப் பகுதி இப்போதுள்ள பொள்ளாச்சித் தாலுகாவாகும் . இதன்கண் ஆனைமலை யென்னும் ஊர் பண்டை நாளில் நன்னனூர் என்ற பெயர் கொண்டிருந்த தென் ஆனைமலைக் கல்வெட்டு (ஹ.சு.சூடி. 214 டிக 1927,28; வீரக் கேரள வளநாட்டு நன்னனூர்) கூறுகிறது .இவனோடு களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல் பொருடற்றி வென்றி யெய்திய வாகைப் பெருந்துறை,இப்போது ஈரோட்டுக் கருகிலுள்ள பெருந்துறையாகலாம்" (ஔவை சு.துரைசாமிப்பிள்ளை, 2007; ப. 162). இக்கூற்று தற்கால ஆனைமலையே பண்டைக் கால நன்னனூர் என்பதை உய்த்துணர முடிகிறது. அதேபோன்று நன்னன் வசம் இருந்த 'பெருந்துறைப் பகுதி இப்பொழுதும் அதே பெயரில், ஈரோட்டுக்கு அருகில் 'பெருந்துறை' என்ற பெயராலே அழைக்கப்படுவதை விளங்கிக்கொள்ள முடிகிறது. இத்தகைய பெயர்களே வரலாற்றுத் தொடர்ச்சிகளை உறுதிப்படுத்துகிறது.

மேலே கூறப்பட்டுள்ள கருத்தை கவனிக்கலாம். பதிற்றுப்பத்தின் காலம் வேறு, ஆனைமலை கல்வெட்டின் காலம் வேறு எனினும், கல்வெட்டுச் சான்றை ஔவை சு. துறைசாமிப்பிள்ளை எடுத்துக்காட்டியிருப்பதன் வழி இம்முறைமை தெளிவாகின்றது.








**ப. கமலேஷ்,**
கணினி அறிவியல்,
முதலாம் ஆண்டு,
விஸ்டாஸ்,
இரண்டாம் பரிசு
பெற்ற ஓவியம்.



# காதல் என்னும் நிலா!

வானில் தோன்றிய நிலா போல
மனதில் தோன்றிய காதல் நீ.
ஆனால், இரவில் மட்டும் அல்ல,
பிறவி முழுதும் காண ஆசை.

காணும் ஆசை மட்டுமல்ல,
உடன் வரும் பேராசையும் தான்.
என்னைக் காணாமல் போனாலும் சரி,
என்னுடன் வாழாமல் போனாலும் சரி.

நாம் சேர்ந்து வாழவில்லை என்றால் என்ன?
என் காதல் வாழும், என் உயிர் உள்ள வரை.
உயிர் மறையும் நொடியிலாவது
உனக்குப் புரியுமா,
இந்த கவிதையும்
என் காதலும் என்றும் உனக்குத்தான் என்று!

**ம. செபின் ரீனா**
இளங்கலை இணைய பாதுகாப்புத்துறை,
இரண்டாம் ஆண்டு, விஸ்டாஸ்.






# டீ லா நோ டீலா

முனைவர் **பூர்ணிமா** துறைத்தலைவர்,
இந்தித் துறை, விஸ்டாஸ்.

அப்பா, நல்ல காலம். நீங்க ஹிந்தி ஆபீஸர் ஆயிட்டீங்க. கூடுதல் பணிச் சுமைனாலும், அக்கவுண்ட்ஸ் பணியோட இந்த பணியும் செய்தால் 2000/- ரூபாய் கூடுதல் வருமானம். பால் செலவுக்கு ஆச்சு. மனைவியின் சந்தோஷத்தால் வேதனை அடைந்தார் சுதன்.

"எல்லாம் சரிதான் பா. ஆனா எனக்குச் சுத்தமான ஹிந்தி தெரியாதே. ஆல் இல்லாத ஊருக்கு, இலுப்பப்பூ சர்க்கரை. அவ்வளவுதான்."

"ஏங்க சும்மா இதைப் பத்தியே நினைச்சு மருகறீங்க. உங்களுக்குச் சுத்த ஹிந்தி தெரியலனா என்ன, அந்த அஸிஸ்டெண்டு, அதாங்க.. நாளைலேருந்து வேலைக்கு வரப்போற அந்த அம்மா. அவங்க ஹிந்தி படிச்சிட்டு தானே, இந்த வேலைக்கு வராங்க. உங்களுக்குச் சந்தேகமான நேரத்திலே அவங்க கிட்ட கேட்டுக் கத்துக்கோங்க. உங்களுக்குக் கணக்குத் தெரியலன்னாதான் தப்பு.

இது கூடுதல் பணிதான். அதனால நீங்க நெனைக்கறா மாதிரி இதுல விவகாரமா ஒண்ணும் நடக்காது. பயப்படாதீங்க. 15 வருஷமா நான் உங்க கூட இருக்கேன். உங்க திறமை எனக்குத் தெரியாதா? நீங்க, நல்லா சமாளிப்பீங்க. கவலப்படாதிங்க. மனைவியின் பேச்சில் ஆறுதல் அடைந்தாலும், மனசே சரியில்ல சுகனுக்கு. "ச்சே! ஒழுங்கா நாம ஹிந்தி செய்தி, படம், சீரியல், அப்படின்னு பாத்து நம்ம ஹிந்திய வளத்துக்காம, அந்த புதுப் பெண் அஸிஸ்டெண்ட் கிட்ட தல குனியனுமா? பேசாம ஹிந்தி அறிவு இவ்வளவு தான்னு அந்த அம்மா கிட்ட முதல்லேயே சொல்லிடணும். கூடவே முழு பொறுப்பையும் ஒப்படைச்சு, வேலை நிரந்தரமாயிட்டா, இன்னும் 2-3 வருஷத்துல நீங்களே கூட ஹிந்தி ஆபிஸர் ஆவரதுக்கு, நானே சிபாரிசு செய்யறேன். அப்படீன்னு அந்த அம்மா கிட்ட ஒரு டீல் போட்டு பல்கடிச்சிட்டு ஒரு 2-3 வருஷத்த ஓட்ட வேண்டியதுதான்." சுகன் தனக்குத் தானே பேசி, முடிவெடுத்துச் சமாதானமானார்.

கமலீ, நல்ல காலம் உனக்கு ஹிந்தி அஸிஸ்டெண்டு வேலை கிடச்சுருக்கு. நான் கும்பிடற சாமி, நம்மல கைவிடல. இனிமே நம்ப பொண்ணுக்கு நல்ல வரனா வரும் பாருங்க. அர காசு, உத்தியோகம்னாலும், அரண் மனை உத்தியோகம் பாருங்க. ஏதோ நம்ப கமலிக்கு நல்ல சர்கார் வேலை கிடச்சுடுச்சு. இனிமே கவல இல்ல.

தாயின் பேச்சில் ஆறுதல் அடைந்தாலும், கமலி உள்ளுக்குள் குமைந்தாள். அம்மா, எல்லாம் ஹிந்தி தப்பில்லாம எழுதுவேன், படிப்பேன், டைப்படிப்பேன். ஆனா எனக்கு ஹிந்தி பேச வராதே. நாளைக்கு ஆபிசர் என்னையே, ஒரு லெட்டர் அடிச்சி கொண்டு வாங்க, அப்படின்னு சொன்னா, எனக்குத் தெரியாதே. எனக்கு அவமா னமா இருக்குமே. அதுவும் வேலைக்கு இப்பத்தான் சேர போறேன்.*

போற இடத்துல நல்ல பெயர் வாங்க வேண்டாமா? அது போகட்டும், குறைந்த பட்சம், ஒண்ணும் தெரியாத மண்டுன்னு முத்திரை குத்தி, வெளியே அனுப்பிய அப்புறம், நெலம இன்னும் கேவலமா ஆகிடுமே மா?

மகளை ஆச்சரியத்துடன் பார்த்த தாய், "அப்படில்லாம் ஒண்ணும் நடக்காது. கண்ணு. நல்ல சாமிய, வேண்டிக்கிட்டு, சீக்கிரம் தூங்கு. போ தாயீ, நாளைக்கு முதல் நாள் சீக்கிரமே

வேலைக்கு போகணும் போய் தூங்கு. தாயின் சொல்லுக்கு கமலி படக்கென்று சென்றாலும், தனக்கு எல்லாம் தெரியும் அப்படின்னு அந்த ஆபிஸர் முன்னாடி வேஷம் போட்டு, அவமானம் அடையறத விட முதல் நாளே, நம் குறையை சொல்லிட்டா தேவல.

சார்கிட்ட, போகப் போக சீக்கிரம் கத்துகிறேன் சார். எப்படியாவது எனக்கு உதவி செய்யுங்க. இந்த வேலய நம்பித்தான் என் எதிர்காலம் இருக்கு. "அப்புடீன்னு சரணடைய வேண்டியது தான். குறைந்த பட்சம், குத்தத்த ஒத்துக்கற ஒழுக்கமுள்ள பொண்ணு, அப்படின்னு என்னைப் பத்திய நல்லெண்ணமாவது மிஞ்சும், மனதில் எண்ணியதைச் செயலாக்கத் திட்டமிட்டபடியே தூங்கினாள்.

மறுநாள், ஆபீஸர், கமலி இருவருமே படபடப்புடன் இருப்பதைக் கண்டு இருவருமே வியந்தனர். முதலில் சுகன், "அம்மா, சொல்றேனு தப்பா நெனக்காதீங்க. இந்த ஆபீஸ்ல பார்லிமெண்டரி கமிட்டி வரப்போகுதுன்னு, ஹெட் ஆபிஸ்ல சொன்ன செய்திய வெச்சு, இங்க இருக்கறதுல நல்லா ஹிந்தி பேச தெரிஞ்ச என்ன ஹிந்தி ஆபிஸரா ஆக்கிட்டாங்க. மேலே பேசிய ஆபீஸரை வியப்புடன் கண்ட கமலி, தன் நிலையையும் தெரிவிக்க, இருவரும் சமாதானம் அடைந்தனர்.

"சார், சொல்றேன்னு, தப்ப நினைக்காதீங்க பேசாம நாம Google Teacher கிட்டயிருந்து, தெரியாததை கத்துக்கலாமா?. இளைய தலைமுறையின் அறிவுரைக்கு செவிசாய்த்த. ஆபீஸர், ஆறுதல் அடைந்தார்.

2 மாதத்தில் பார்லிமெண்டரி கமிஷனர் வந்தனர். கமிஷனருக்கு நல்ல உபசரிப்பு செய்து, தன் ஹிந்தி பேச்சுத் திறமையால் அதிரவைத்தார் சுகன். கமிஷனர் மெல்ல சுகனைப் பார்த்து அட, தமிழ்நாட்டில் இவ்வளவு நல்ல ஹிந்தியா?, உங்க துறையின் திறமையில் எனக்கு முழு நம்பிக்கை வந்துவிட்டது. ஆனால் எனக்குப் பதிலுக்குத் தமிழ் கற்றுத் தர முடியுமா?. ஏன்னா, "ஆக்ரா தமிழ்ச் சங்கத்தில் என்னைத் துணைத் தலைவராகத் தேர்ந்து எடுத்திருக்காங்க. என்ன டீல் ஓக்கேவா?"

கமிஷனரின் டீல் கேட்டு ஹிந்தித் துறை சந்தோசத்தில் வாய் அடைத்து நின்றது.





**வி. கதிர்வேல்**
இளங்கலை வான்பரப்பியல்
முதலாம் ஆண்டு

# கல்லூரி எனும் காவியம்

**சே.ஷேமமாலினி**, இளங்கலை கணினி அறிவியல் , மூன்றாம் ஆண்டு



காலத்தின் ஓட்டத்தில் கடகட வென
கரைந்து கொண்டிருக்கும் கல்லூரி நாட்கள்
நெஞ்சம் கண்ட கனவைக் கல்லூரியின்
முதல் நாளில் கண்கள் கட்டி அணைத்தன
அன்பின் உருவாக நண்பர்கள் அமைந்தனர்...
அறிவின் ஊற்றாக ஆசிரியர்கள் கிடைத்தனர்..
கால வெள்ளத்தில் கல்லூரி நாட்கள்
வேகமாக நகரத் துவங்கின....
பரிட்சையில் பார்த்து எழுதத் திட்டமிட்டு
அனைவரும் படைப்பாளிகள் ஆனோம் ...
புத்தகப் பாடம் மட்டும் வாழ்க்கை அல்ல
என  உணரத் துவங்கினோம்..
எங்கள் வகுப்பின் அனைத்துச் சுவர்களும்
எங்கள் கதைகளைப் பாடும்..
அங்குள்ள ஒவ்வொரு மேசையும்
எங்கள் கண்ணீரைப் பற்றிப் பேசும்..
ஜன்னல் ஓரத்தில் பூத்துக் குலுங்கும் மரம்
எங்கள் சிரிப்பை எண்ணி நடனமாடும்...
அங்கிருக்கும் கரும் பலகைக்கூடத் தேர்வு முடிவின்போது
நாங்கள் கொள்ளும் பயத்தை எள்ளி நகைக்கும்...
இன்னும் சில நாட்களில் வரப்போகிறது
கதையின் கடைசி அத்தியாயம்...
வாசலில் நின்று திரும்பிப் பார்த்தால் அனைத்தும்
நினைவுகளாகக் காட்சியளிக்கப் போகின்றன...
நேற்றுவரை சிரித்துக்கொண்டே கடந்து வந்த பாதை
ஏனோ கடைசி நாளில் கண்ணீரை வரவழைக்கப் போகின்றது...
உலகின் ஏதோ ஒரு மூளையில் என்றாவது கல்லூரி
மாணவர்கள் ஒன்றாக இருப்பதைக் கண்டால்
அன்று என் உதட்டோரத்தில் வரும் சிறு புன்னகைக்
கூறும் என் கல்லூரி வாழ்க்கையை....
வாழ்க்கை எண்ணும் பாதையில் அடுத்த அடியை வைக்க
வேண்டிய என் மனமோ இரண்டடி பின் சென்று.
கல்லூரியின் முதல் நாளைத் தேடுகிறது!



**வெ. சக்திவேல்**
நான்காம் ஆண்டு
சட்டத்துறை, விஸ்டாஸ்

# வானம்

வானத்தில் இருக்கும் நட்சத்திரங்கள் நூறு
சூரியனைப் போல் ஏதும் இல்லை பாரு
அமைதியும் சாந்தமுமாய் இருக்கும் நிலா
தினமும் பூமியைச் சுற்றி வரும் விழா
மேகங்கள் உடைந்து மழையாய் பொழியும் அந்நேரம்
வானத்தில் இருந்து இறைவன் நமக்குத்தரும் ஆசீர்வாதம்
மாரியின் மழை துளிகள் கரைகின்ற பொழுது
வண்ணங்கள் உடைந்து வானவில்லாய் தோன்றுவது அழகு
இரவையும், பகலையும் வான்திரையில் கலந்துகாட்டும் வானம்கூட
பல உணர்வுகளை வெளிபடுத்தும் மனிதன் போல...



# விவசாயி

பயிர் செய்த இடமெல்லாம் பழுதாய் போனதே
களை பறித்த இடமெல்லாம் கட்டிடங்கள் ஆனதே
மிஞ்சிய இடத்தில் உழவு செய்யும் அவனுக்கே உழவன் என்று பெயர்.....
விதைக்கத் தவறிய விவசாயி விழுந்து
கிடந்தான் வீதியில் சோற்றுக்காக...

மழையால் மண்டியிட்ட பயிர்களுக்கு
மனு எழுதிச் சென்றான் மன்னரிடம்... - விவசாயி

நிழல் நீங்கா நினைவுகள்
நிழல் தந்த மரங்கள் எங்கே?
பயணியர் நிழற்குடைகள் வந்த பின்பு... வறுமை

கிராமத்தில் குடிசை
மாளிகையில் வளர்ந்த நான்
சிட்டி எனும் சிறைக்குள் சிக்கிக் கொண்டேன்
மாளிகையின் வறுமையால்



**சி.சிவசங்கர்**,
2-ஆம் ஆண்டு,
இளநிலை அறிவியல் வேளாண்மை,
விஸ்டாஸ்.



**சு.திருமகள்**, இளங்கலைத் தகவல் தொழில் நுட்பவியல், 2-ஆம் ஆண்டு

# விமர்சனங்களைக் கேட்டுக்கொள்! பழகிக் கொள்ளாதே!

**முன்னுரை**

மனிதர்கள் தவறு செய்ய வாய்ப்புள்ளது. எப்போதாவது தவறு செய்வது மனித இயல்பு. வாழ்க்கை செல்லச் செல்ல, நம் தவறுகளில் இருந்து நம்மை மேம்படுத்திக் கொள்ள நமக்கு வாய்ப்புகள் கிடைக்கின்றன. சிலர் நம்மை விமர்சிக்கும்போது அதை ஜீரணிக்க கடினமாக இருக்கிறது. ஆனால் அதற்காக அவர்களின் வார்த்தைகளை நாம் புறக்கணிக்க வேண்டும் என்று அர்த்தமல்ல. எனவே, விமர்சனத்தை நேர்மறையாக எடுத்துக்கொள்ளவும், நாம் எங்கு மேம்படுத்த வேண்டும் என்பதைப் பகுப்பாய்வு செய்யவும் கற்றுக்கொள்ள முயற்சிக்க வேண்டும். இத்தகைய விமர்சனம் குறித்து இக்கட்டுரை அமைகிறது.

**விமர்சனம்**

விமர்சனம் என்பது ஒரு கருத்தை, செயலாக்கத்தை, படைப்பை, நபரை, அல்லது அமைப்பை மதிப்பீடு செய்து முன்வைக்கப்படும் கருத்துக்கள் ஆகும். விமர்சனம் ஒன்றின் பயன் விலை, நன்மை தீமை, படைப்பின் தரம் அல்லது பிற மதிப்பீடுகளை முன்வைக்கிறது. விமர்சனம் என்ற சொல் ஒரு எதிர் மதிப்பீட்டை பொதுவாகச் சுட்டுகிறது.

விமர்சனம் என்பது பழங்காலத்தில் போரில் வீரர்களுக்காகவும், ஒருவரின் செயல், படைப்பு போன்றவற்றைக் கொண்டு வருவதற்கு மதிப்பீடு செய்து திருத்தி ஆக்கபூர்வமான மாற்றத்தைக் கொண்டு வரவும் உருவாக்கப்பட்டவை.

விமர்சனம் ஒரு தரப்பினரை அழிக்கும், அல்லது பாதிக்கும் நோக்குடன் செய்யப்படுவதுண்டு. ஒரு போரில் எதிரியை அழிக்கும் நோக்கில் செய்யப்படும் விமர்சனம் இத்தகையதாகும்.

**விமர்சனத்தின் முக்கிய அம்சங்கள்**

**மதிப்பீடு:** விமர்சனம் ஒரு கருத்தை, செயல்முறையை, படைப்பை, நபரை அல்லது அமைப்பை மதிப்பிடுவதன் மூலம் தொடங்குகிறது.

**ஆக்கபூர்வமான நோக்கம்:** விமர்சனம் பெரும்பாலும் குறைகளைச் சுட்டிக்காட்டி, திருத்தி, மேம்படுத்துவதற்கான நோக்குடன் ஆக்கபூர்வமானதாக இருக்கும்.

**எதிர்மறையான விமர்சனம்:** விமர்சனம் எதிர்மறையாகவும் இருக்கலாம், ஆனால் அது ஒரு விஷயத்தைப் புரிந்துகொள்ளவும், மேம்படுத்தவும் உதவும் ஒரு வழியாகவும் இருக்கலாம்.





### விமர்சனம் செய்யப்படும் விஷயங்கள்

அரசியல் கொள்கைகள், திட்டங்கள், தலைமைத்துவம், கலைப் படைப்புகள், சமூகக் கட்டமைப்பு, சமூக நிலைமைகள், சமயம், கோட்பாடுகள், தொழில்நுட்ப நுணுக்கங்கள் எனப் பலதரப்பட்டவை விமர்சனத்துக்கு உட்படுத்தப்படலாம்.

### விமர்சனங்களால் நன்மைகள்

விமர்சனம் ஒரு விஷயத்தை நன்கு புரிந்துகொள்ளவும், மேம்படுத்தவும், அல்லது மாற்றத்தைக் கொண்டுவரவும் உதவும். விமர்சனங்கள் விண்ணின் மீது ஏவப்படும் சிறு அணுக்கள். அவைகளால் நன்மைகள் ஏற்படுவதும் தீமைகள் ஏற்படுவதும் அவரவரின் ஏற்புத்தன்மையைக் கொண்டது. தகுந்த விமர்சனத்தை ஏற்று அதற்கேற்ப தம்மை நல்வழிப்படுத்திக் கொள்வது வாழ்வில் நிம்மதியைத் தரும்.

முத்தமிழை வளர்த்த புலவர்கள் தொட்டு முனிவர்கள் வரை விமர்சனத்திற்கு உட்பட்டனர். அதன் விளைவே போராட்டத்தில் முடிந்து பிறகு தொகுக்கப்பட்டுப் புலவர்கள், வீரர்கள் என்ற அங்கீகாரத்தைப் பெற்றனர்.

குறைகளைத் திருத்திக் கொள்ள எனத் தொடங்கிய விமர்சனங்கள் இன்று கேலியாகவும் கிண்டலாகவும் அமைகின்றன. விமர்சனம் என்பது நம் பலவீனத்தின் அடையாளம். இவற்றைக் கண்டு பயந்து ஓடுபவன் ஓடிக்கொண்டேதான் இருப்பான்; பயத்தை எதிர்த்து நின்றவனே வெல்வான். ஒருவர் தம்மீது விமர்சிக்கும் போதே அவர்களின் சக்தியையும் வலிமையையும் அறிய முடியும்.

### விமர்சனங்களை ஏற்றுக்கொள்

விமர்சனங்களில் இரண்டுவகையுண்டு. ஒன்று திருத்திக்கொள்வதற்கு, மற்றொன்று புரளி பேசுவதற்கு. புரளி போன்ற விமர்சனத்திற்குச் செவிசாய்க்காமல் தம் தலையை நிமிர்த்தினால் வாழ்வில் செழிப்படையலாம்.

நாம் விமர்சிக்கப்படுகிறோம் என்று புலம்புவதைவிட நாமும் விமர்சிக்கப்படுகிறோம் என்று எண்ண வேண்டும். தம்மைச் செம்மைப்படுத்திக் கொள்ள வேண்டும். அன்று நம் நாட்டின் தலைவர்கள், வீரர்கள் விமர்சனங்களாலேயே செழிப்புற்றனர். நம் பல்கலைக்கழகமோ பல விமர்சனங்களைத் தாண்டித்தான் இன்று பல கிளைகளாக வளர்ந்துள்ளது. எனவே விமர்சனங்கள் வாழ்வதற்குத்தானே! தவிர வீழ்வதற்கு இல்லை!

விமர்சனம் குறைகளை, எது வேலை செய்யவில்லை என்பது பற்றி நிறையை உரையாடல்களை முன்வைக்கிறது. ஆனால் அது தீர்வுகளை முன்வைப்பதில்லை. இதனால் தீர்வுகளுக்கு செலுத்தப்படக்கூடிய வளங்கள் விமர்சனத்தில் வீணடிக்கப்படுகிறது. அக்கறை உள்ள ஒன்றைப் பற்றி விமர்சனம் செய்யும் போது, அதை மேலும் பாதிப்படைய, அல்லது பலவீனமடையச் செய்துவிடும் அபாயம் உள்ளது.

### முடிவுரை

விமர்சனத்தை நேர்மறையாக எடுத்துக்கொள்ளக் கற்றுக்கொள்ளுங்கள். இது உங்கள் ஆளுமையை வளர்க்க உதவும் ஒரு திறமையாகும்.

விமர்சனத்தை உள்வாங்குங்கள் விமர்சனத்தை உள்வாங்கி, உங்கள் தவறுகளை மதிப்பிடுங்கள். விமர்சனத்தை உங்கள் திறமைகளை மேம்படுத்துவதற்கான ஒரு வழியாகப் பாருங்கள். எனவே, நாம் விமர்சனங்களை ஏற்றுக் கொள்வது என்பது நம் குற்றத்தை ஏற்றுக் கொள்வது மட்டுமின்றி அது நம் வாழ்வின் வழிகாட்டியாகவும் அமைந்துள்ளது.



# சட்ட மாணவர்கள்

**ஏ. முகமது அபுபெக்கர்**, இளங்கலை, சட்டத்துறை

புத்தகங்கள் மழையாகப் பெய்யும்,
பக்கங்கள் இரவுகளை விழுங்கும்
வழக்குகளின் வரலாறு சொல்லும்
வாழ்க்கையின் புதிர் எழுதும் மாணவர்கள்.

ஒவ்வொரு சட்ட விதியிலும் கனவுகள்,
ஒவ்வொரு கருத்தியலிலும் போராட்டங்கள்.
நியாயம் எங்கே பிறக்கிறது என்று
நித்தம் தேடும் கண்கள், - தூக்கம் மறந்த
நாள் கணக்கே இல்லாதவை.

வழக்குரை ஞராகும் கனவுக்குள்,
வாசிப்பும் வாதமும் துணைநின்று.
நீதிமன்றம் ஒரு மேடை என்றால்,
அவனும் அவளும் நடிகர்கள் அல்ல -
உண்மை பேசும் சாட்சிகள் -

நேரம் எடுத்தாலும் பரிசு கிடைக்கும்,
நேர்மையாய் நடந்தால் நீதியும் பின்வரும்.
சட்ட மாணவர்கள் - நீதி தேடும் வீரர்கள்,
நாளைய குரலாக மாறும் அமைதியின் பயணிகள்.

## வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன் (இயற்கைப் பாதுகாப்பு)



**ஏ. வின்சென்ட்**
வணிகவியல் நிறுவன
செயலாண்மை
மூன்றாம் ஆண்டு



# கருவறையும் கல்லறையும்



**பிரணவ் ரித்தீஸ்** முதலாம் ஆண்டு, இளங்கலை - சட்டத்துறை, விஸ்டாஸ்.

கருவறையிலும் உறங்குகிறாய்,
கல்லறையிலும் உறங்குகிறாய்.
கருவறையில் தாயின் இரத்தத்தை உண்கிறாய்,
கல்லறை உன் இரத்தத்தை உண்கிறது.

கருவறையிலும் உன்னைச் சுமப்பது தாயே,
கல்லறையிலும் உன்னைச் சுமப்பது பூமி தாயே.

கருவுற்ற கருவறையிலும் ஏதும் கொண்டுவருவதில்லை.

புழுவுக்கு இறையாகிப் போகும் புதைகுழிக்கும் ஏதும்
கொண்டுசெல்வதில்லை

இவ்விரண்டுக்கும் வழிபாதையாம் நடிகர்களின்
நாடகமேடை..



# இயற்கையுடன் பயணம்

**சே. நிதிக்க்ஷா**, முதலாம் ஆண்டு, வணிக மேலாண்மை, விஸ்டாஸ்.



விரித்த பச்சைக் கம்பளமாய் வயல்வெளிகளும்
வெண் முத்துக்களாய் அலங்கரிக்கும் கொக்குகளும்
இருபுறமும் வெண்சாமரம் வீசும் தென்னைகளும்
பன்னீரைத் தெளிப்பது போல விழும் மழைச் சாரல்களும்
நிழற்குடை பிடித்துக் கூடவே வரும் வெண் மேகமும்
சலங்கையின் சத்தம் கேட்கும் குழந்தையின் சிரிப்பும்
இளமங்கையின் முந்தானை வருடலாய் தென்றல் காற்றும்
மேளத்தின் வரவேற்பாய் முழங்கும் இடியின் சத்தமும்
மதிய பசியில் அமிர்தமாய் விளங்கும் மாங்காய் வெள்ளரியும்
இதுதான் என் புகைவண்டிப் பூவுலகப் பயணம்!



# நூலறிவு

முனைவர் **யு. துர்காதேவி**,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, விஸ்டாஸ்

இராவணன் ஆலோசனை மண்டபத்தில் இருக்கும் போது, வென்று வருவேன் எனக் கூறிய இந்திரஜித்துவிடம் வீடணன் கடிந்து கூறுவதாகக் கம்பர்

**நூலினால் நுணங்கிய அறிவு நோக்கினை**
**போலுமால்! – உறு பொருள் புகலும் பூட்சியோய்!**
**காலம் மேல் விளை பொருள், உணரும் கற்பு இலாப்**
**பால! – நீ இனையன பகரற்பாலையோ? (யுத்த இராவண.66)**

எனக் கம்பர் பாடுவார்.

'காலத்தையும் பின்னால் நிகழும் காரியத்தையும் உணர்கின்ற அறிவற்ற சிறுவனே! பல நூல்களையும் கற்ற நூலறிவினாலும், நுணங்கிய அறிவாற்றலும் எதிர்காலத்தை நோக்கும் திறமுடையாய் போலும், நேர இருப்பதைக் கூறும் மன உறுதியுடன் பேசுகிறாய். நீ இத்தகையவைகளைப் பேசுதல் தகுமோ?' என்பது இப்பாடலின் கருத்தாகும்.

இந்திரஜித்துவுக்கு அறிவுரை கூறுவதாக இப்பாடலில் அமைந்த பல நூல்களைக் கற்பதால் கிடைக்கும் அறிவாற்றல் கொண்டு எதிர்காலத்தைக் கணிக்க முடியும் என்ற கருத்து பெறப்படுகிறது.

## சொல்லுக்கு அடிப்படை நூல்


ஒருவரின் சொல்வன்மைக்கு அடிப்படையாக அமைவது அவர்தம் கல்வியறிவாகும். இராவணனின் முடிமணிகளைப் பறித்துக் கொண்டு வந்த சுக்கிரீவனிடம் தன் மகிழ்ச்சியைப் பகிர்கிறான் இராமபிரான். அதற்கு மறுமொழி கூறும் சுக்கிரீவன்.

**நூல் வலி காட்டும் சிந்தை நும் பெருந் தூதன் வெம் போர்**
**வேல் வலி காட்டுவார்க்கும், வில் வலி காட்டுவார்க்கும்**
**வால் வலி காட்டிப் போந்த வள நகர் புக்கு மற்று என்**
**கால் வலி காட்டிப் போந்தேன்; கை வலிக்கு அவதி உண்டோ?**

**(யுத்த-மகுட42)**

என்கிறான்.

கற்ற நூல்களின் வலிமையைத் தன் சொல் வன்மையால் காட்ட வல்ல மனமுடைய உம்முடைய பெருமைக்குரிய தூதுவானகிய அனுமன், என்று குறிப்பிடுவதன் மூலம், ஒருவனின் சொல்வன்மைக்கு அடித்தளம் அமைப்பது அவன் கற்ற நூல்களின் வலிமை என்பதைக் கம்பர் உணர்த்துகிறார்.



**எஸ். காவ்யா ஸ்ரீ**
இளங்கலை வணிகவியல் கணினிப் பயன்பாடு, முதலாம் ஆண்டு



# அப்பா



**பி. அனிதா**, இளங்கலை, சட்டத்துறை

நீ ஒரு வரியில் எழுதும் வாக்கியம் இல்லை.
என் வாழ்க்கை வரலாறு நீ தான்.
நான் கேட்பதை மட்டும் அல்லாமல்
நான் நினைப்பதையும் வாங்கிக் கொடுப்பாய்.
நான் உயர உயர கழுகு போல் பறக்க வேண்டும்
என்பதற்காக நீ மாடாய் உழைக்கின்றாய்.
உன்னை ஒரு பண்டிகையில்கூடப் புதிய ஆடைகளில்
பார்த்து இல்லை எனக்குப் புது ஆடை வாங்கிக்
கொடுக்காமல் இருந்தது இல்லை.
நான் மட்டுமே உன் உலகம் என்று எனக்காக
வாழ்கிறாய்.நான் ஒரு நாள் மிகப்பெரிய
சிகரத்தை அடைவேன் அப்போது
உன்னை இவ்வுலகம் அறியச் செய்வேன்!

**கா.சுபலட்சுமி**, முதலாம் ஆண்டு, வணிக மேலாண்மை, விஸ்டாஸ்.

# தமிழ்மொழிக் கல்வி

கல்வி என்பது மனிதனின் வாழ்க்கையை வளப்படுத்தும் ஒரு வெளிச்சம். அந்த வெளிச்சம் தாய்மொழியில் பெறும்போது, அது அறிவுக்கும் அடையாளந்துக்கும் இடையே ஒரு பாலமாக அமைகிறது. தமிழ்மொழிக் கல்வி என்பது ஒரு பாடம் மட்டுமல்ல. அது ஒரு உணர்வு, ஒரு அடையாளம், ஒரு பண்பாடு.

## தமிழ்மொழியின் தனித்துவம்

தமிழ்மொழி உலகின் மிகப்பழமையான, தொடர்ச்சியாகப் பேசப்பட்டு வரும் மொழிகளில் ஒன்று. சங்ககாலந்திலிருந்தே இதன் இலக்கிய மரபுகள் சிறந்து விளங்குகின்றன. தமிழ் மொழியில் கல்வி கற்பது, ஓர் மனிதனுக்குத் தனது வேர்களைப் பற்றிய முழுமையான புரிதலை வழங்கும்.

## தாய்மொழிக் கல்வியின் முக்கியத்துவம்

மனித மனநிலையின் மேம்பாடு: தாய்மொழியில் கல்வி கற்றல், மாணவர்கள் எளிதாகப் புரிந்து கொள்ள, தம்மை வெளிப்படுத்த, சுயநினைவை வளர்த்துக்கொள்ள உதவுகிறது.

பாரம்பரிய அறிவு மற்றும் புதுமை : தமிழ்மொழிக் கல்வி ஒரு பாரம்பரிய அறிவை எடுத்துரைக்கும், அதே நேரத்தில் புதுமை சேர்க்கும்.

## உணர்ச்சிகள் மற்றும் கலாச்சார உறவு

ஒருவர் எந்த மொழியில் படிக்கிறாரோ, அந்த மொழியில் அவர் கனவுகளையும், உணர்வுகளையும் வெளிப்படுத்துவதை எளிதாக்குகிறது.



# இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்

**மா. நாகபிரபா**, மூன்றாம் ஆண்டு, இளங்கலை வான்பறப்பியல், விஸ்டாஸ்.

## முதல் பரிசு

### முன்னுரை



மொழி மனித இனத்தின் ஆதி அடையாளம். அது பண்பாட்டுப் பரிணாம வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டது. ஓர் இனத்தின் மையப் புள்ளியாக விளங்குவதும் மொழியே. அது நம் இருப்பின் அடையாளம். நம் தாய்மொழியாம் தமிழ் மொழியின் வேர், சங்கத்தில் தொடங்கி இன்றைய காலம் வரை இடர் பல களைந்து, உயர்தனிச் செம்மொழியாய் செழித்தோங்கி இருக்கிறது.

நமது தாய்மொழியாகிய தமிழைத் தமிழ் இலக்கியங்கள் போற்றுகின்றன. தமிழ் வணக்கம் தற்கால இலக்கிய மரபாகி விட்டது. நாடும் மொழியும் நமதிரு கண்கள் என்கிறார் பாரதியார். தமிழ் காலவெள்ளத்தில் கரைந்து போன மொழிகளுக்கிடையில் நீந்தித் தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது. அத்தகைய உயர்தனிச் செம்மொழியாகிய தமிழ் மொழியின் பெருமையை இக்கட்டுரை விவரிக்கின்றது.

### தமிழின் பழமை

உலகின் மூத்த மொழிகளுள் ஒன்றாக விளங்குவது தமிழ் மொழியாகும்.

"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றிய மூத்தகுடி" என்று புறப்பொருள் வெண்பாமாலை என்ற புற இலக்கண நூல் கூறுவதைக் கொண்டு தமிழின் பழமையை நாம் உணரலாம். தமிழில் இருந்துதான் பிற திராவிட மொழிகள் தோன்றின என்று அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். தொல்காப்பியத்திற்குப் பாயிரம் எழுதிய பனம்பாரனார், ‘‘வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறும் நல்லுலகம் " என்று குமரிக் கடல் முனையையும் வேங்கட மலையையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித் தந்த பெருமை தகைசால் தமிழன்னையைச் சாரும். ‘‘உலகம் வேரூன்றிய நாள் முதல் உயிர்மொழி’’ என்றார் பாவலரேறு பெருஞ்சித்திரனார்.

### காலத்தை வென்ற மொழி

உடலுக்கு உரமேற்றும் உயிர்க்கு உணர்வூட்டும் மொழி தமிழ், இலக்கிய இலக்கண அழகுடன் காலத்தை வென்று பல நூற்றாண்டுகளைக் கடந்து இனிமை குன்றாமல் நெஞ்சத்தை நெகிழச்செய்கிறது அருந்தமிழ்.

முச்சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பெருமை தமிழர்களான நமக்கே உரித்தானது. அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்னரே ஓலைச்சுவடி, செப்பேடு, கல்வெட்டு ஆகியவற்றில் தமிழ்மொழி எழுதப்பட்டு வந்துள்ளது.

### தமிழின் பெருமை

செம்மொழியாக ஒரு மொழியைத்தேர்ந்து அதன் இலக்கியப் படைப்புகள் வளம் மிகுந்ததாகவும் பழமையானதாகவும் இருக்க வேண்டும். இந்தியாவில் செம்மொழி என அறிவிக்கப்பட்ட முதன்மொழி தமிழ் தான். தமிழ் மொழியின் பெருமைக்கு இதுவே ஒரு சிறந்த மகுடம் ஆகும்.

## சான்றோர் வளர்த்த தமிழ்

### ஜி.யு. போப்பின் தமிழ்ப்பணி

தமிழ் மொழியால் ஈர்க்கப்பட்டு, தமிழாய் மலர்ந்து மணம் பரப்பிக் கொண்டு தமிழுலகில் என்றும் அழியாப் புகழ்பெற்றவர். உலகப் பொதுமறையான திருக்குறளை நாற்பது ஆண்டுகள் படித்துச் சுவைத்த போப் அதனை ஆங்கிலத்தில் மொழிப்பெயர்த்து 1886 ஆம் ஆண்டு வெளியிட்டுத் திருக்குறளின் பெருமையை உலகறியச் செய்தார்.

ஆங்கில மொழியை அன்னை மொழியாகக் கொண்ட போப் "இங்கே ஒரு தமிழ் மாணவன் உறங்கிக் கொண்டிருக்கிறான்" எனத் தனது கல்லறையில் எழுதுமாறு இறுதியில் எழுதித் தன்னைத் தமிழராகவே ஆக்கிக் கொண்டார்.

### வீரமாமுனிவர் தமிழ்ப்பணி

இத்தாலி நாட்டில் பிறந்து, தமிழகம் வந்து தமிழ் மொழியைக் கற்று. தமிழ் மொழிப் பற்றினால் தைரியநாதர் என முதலில் சூட்டிக் கொண்ட தன் பெயரைக் தனித்தமிழாக்கி வீரமாமுனிவர் என மாற்றிக் கொண்டார். இவர் முதன் முதலில் "சதுரகராதி" என்னும் அகராதியை வெளியிட்டார்.

### நான்காம் தமிழ்ச்சங்கம்

"முத்தமிழ்த் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால் மெத்த வணிகலமும் மேவலால் - நித்தம் அணைகிடந்த சங்கத்தவர் காக்க ஆழிக்கு இணைகிடந்த தேதமிழ் ஈண்டு" - தனிப்பாடல் திரட்டு

தமிழ், இயல், இசை, நாடகம் என முத்தமிழாய் வளர்ந்தது. முதல், இடை, கடை ஆகிய முச்சங்கங்களால் வளர்க்கப்பட்டது. ஐம்பெருங்காப்பியங்களை அணிகலன்களாகப் பெற்றது. சங்கப் புலவர்களால் காக்கப்பட்டது.

கடற்கோளால் கொள்ளப்பட்ட இச்சங்கங்கள் பின்னர் பரிதிமாற் கலைஞர், உ.வே. சாமிநாதர், இராகவனார் ஆகிய பேராசிரியர்களின் துணையுடன் பாசுகர சேதுபதி தலைமையில் பாண்டித்துரை மேற்பார்வையில் மதுரையில் நான்காம் தமிழ்ச்சங்கம் அமைத்துத் தமிழை வளர்த்தனர்.

### உலகத்தமிழ் மாநாடு

உலகிலேயே மொழிக்காக முதன்முதலில் மாநாடு நடத்திய நாடு மலேசியா. அதுவும் தமிழ்மொழிக்காக நடைபெற்றது. தமிழைத் தாய்மொமொழியாகக் கொண்ட இலங்கை, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் உள்ள தமிழர்களின் பங்களிப்பும் தமிழுணர்வுமே இதற்குக் காரணம்.

### தமிழ்மொழியின் சிறப்புகள்

தமிழ் இலக்கிய இலக்கணச் சிறப்புடைய மொழி. உலகப் பொதுமறையான திருக்குறள் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட பெருமை உடையது. 'சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே அதைத் தொழுது படித்திடடி பாப்பா' என்று பாரதியார் குறிப்பிடுகிறார்.

ஒலி வடிவம், வரி வடிவம் கொண்டு பொருள் தரும் மொழி தமிழ். எந்த மொழித் துணையும் இன்றித் தனித்து இயங்கும் சிறப்புத் தமிழுக்கு உண்டு. திருவள்ளுவர், ஔவையார், கவிச்சக்கரவர்த்தி கம்பர், மகாகவி பாரதியார் போன்ற பல புலவர்களாலும் அரசர்களாலும் வளர்க்கப்பட்ட மொழி நம் தமிழ்மொழி. தமிழர்களின் பெருமையையும், தமிழ் மொழியின் சிறப்பையும் எடுத்துரைப்பதாகத் தஞ்சை பெரிய

கோவில், கரிகாலனின் கல்லணை, தமிழுக்கே உரித்தாக விளங்கும் மதுரை மாநகர் இன்றளவும் நம் மொழிக்குச் சான்றாக விளங்குகின்றன.

தமிழுக்கு அமுதென்று பேர்! அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்! என்ற பாவேந்தர் பாரதிதாசனின் வரிகள் தமிழின் பெருமையைப் புலப்படுத்துகிறது.

**முடிவுரை**

காற்றினால் ஏற்படும் ஓசையை ஒலியாக்கி, அதற்கு வரிவடிவம் தந்து மொழிகள் நிலைபெறச் செய்த மனிதனின் செயலுக்கு இணையான படைப்போ, கண்டுபிடிப்போ இதுகாறும் தோன்றவில்லை என்பதே உண்மை. அவ்வாறு தோன்றிய முதல் மொழி தமிழ் மொழி என்பது மிகவும் பெருமைக்குரிய ஒன்று.

இத்தமிழ்மொழி சான்றோர் பலரின் தியாகத்தாலும், உழைப்பாலும் இன்று உயர்தனிச் செம்மொழியாக நிலைபெற்று நிற்கிறது. காலப்போக்கில் மொழி பல மாற்றங்களை அடைந்தாலும், இன்றும் தமிழின் சிறப்பு எங்கும் உள்ளது. ‘‘சாகும் போதும் தமிழ்படித்துச் சாக வேண்டும் - என்றன் சாம்பலும் தமிழ் மணந்து வேக வேண்டும்’’ என்றார் க.சச்சிதானந்தன். இப்படித் தமிழை உயிர் மூச்சாகக் கொண்டு வாழ்ந்த தமிழர்களின் பெருமையையும், தமிழ் மொழியின் சிறப்பையும் காப்பது தமிழர்களின் தலையாய கடமையாகும்.

தமிழன் என்று சொல்லடா! தலைநிமிர்ந்து நில்லடா!



# வளைவுகளில் முந்தாதே

**சுரேஷ்**, இளங்கலை, வணிக மேலாண்மை, புள்ளியியல் வணிகம், விஸ்டாஸ்.

வளைவுகளில் முந்தாதே என எழுதத் தெரிந்த மனிதனே!
கனவுகளில் உந்தாதே என எழுத மறந்தாயோ!
அவள் கனவுகளில் விழுந்த நான்!

கண் எட்டும் தொலைவில் நீயும்,
உன் குரல் கேட்கும் தொலைவில் நானும்
இருந்துவிட்டால் போதுமே
உனக்கும் சேர்த்து நானே காதலித்துக் கொள்கிறேன்!



பெரிதினும் பெரிது கேள்

## முதல் பரிசு

# பெரிதினும் பெரிதுகேள்

**உ.அ. அப்துல் ஹாரித்**, இளங்கலை, வானூர்தி அறிவியல், முதலாம் ஆண்டு



**இ**ருளினை விரட்டிவிடு இலக்கினை அடைவதற்கு
இன்னல்களை எதிர்த்துநில் இமயத்தினைத் தொடுவதற்கு
தோல்விகளில் கற்றுக்கொள் இன்னொரு படி ஏறுவதற்கு
அவமானங்களைப் போர்வையாக்கி விடு
உன்னை ஏளனம் செய்தோர் மத்தியில் சிறகடிப்பதற்கு!

விழுவதும் எழுவதும் வாழ்க்கையின் எதார்த்தம்
விழுந்தால் வருந்தாதே, மண்ணில் விதையாய் விருட்சம்பெறு
எழுந்தால் பயம்கொள்ளாதே, எரிமலையாய் எழுந்து வா
விழுந்துவிட்டேன் என்று கண்ணீர் சிந்துவதைவிட
எழுந்துவிட்டேன் என்று புன்னகை செய்.

துன்பத்தைத் தூரம் வைத்து, இன்பத்தை இதயத்தில் வைத்து
நம்பிக்கையை மனதில் வைத்தால்
சின்னச் சின்ன இன்னல்கள் கூட சின்னாபின்னமாகிவிடும்
எங்கும் எதிலும் வெற்றிபெற உன்னில் என்றும் எரியட்டும்
தன்னம்பிக்கை எனும் தீப்பொறி!

விடியும் என்று விண்ணை நம்புவதுபோல
முடியும் என்று உன்னை நம்பு
தயங்கினால் நீயே தடைக்கல்ஆவாய்
முயன்றால் நீயே முன் உதாரணம் ஆவாய்
தன்னம்பிக்கையோடு தொடர்ந்து முயற்சி செய்து கொண்டே இரு!

துயரங்களைத் தூசி எனத் தட்டிவிடு
உயரங்களை மெல்ல நீயே எட்டிவிடு
இகழ்ச்சியைப் புறம்தள்ளு, இலக்கை நீ வெல்லு
நீ வைக்கும் முதல் அடி அதுவே, உன் வெற்றிக்கு முதல் படி!

நீ வெற்றி பெறும் வரை வீண்முயற்சி எனச் சொல்லும் உலகம்
உன் இலக்கில் வெற்றி கண்டவுடன் விடாமுயற்சி எனச் சொல்லும்
இலட்சியத்திற்கும், அலட்சியத்திற்கும் ஒரு எழுத்துதான் வித்தியாசம்
இலட்சியம் உன்னை முன்னே கூட்டிச் செல்லும்
அலட்சியம் உன்னைப் பின்னே தள்ளிச் செல்லும்.

இலட்சியம் இல்லாத வாழ்க்கை,
முள் இல்லாத கடிகாரம் போன்றது
ஓடினாலும் பயனில்லை, நின்றாலும் பயனில்லை!

# கவித்துளிகள்



முனைவர் **கே. துர்காதேவி**,
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, விஸ்டாஸ்

ஆசைகளுக்குத் தீனியாகித் தீனியாகி
நிலை குலைந்து போனது
நிம்மதி!

கண்ணீர் துளிகள் பட்டு பட்டுப்போய்
இதழ்களை உதித்தது
புன்னகைப் பூ !

நிகழ்கால வறுமை
பதம் பார்த்து விடுகிறது
எதிர்கால ஆசையை!

நேசிப்பின் பிரிவினால்
யாசித்துக் காத்திருக்கிறது
வாசிக்க வேண்டிய கவிதை!

தவறாக எழுதியது யாரோ
கிழித்து எறியப்படுவது
காகிதம்!

தப்பிதம் தாண்டிய அன்பைநாடி
கற்பிதம் ஏந்திநிற்பது
உண்மைநட்பு!

அறிவற்ற முடிவில் எஞ்சி நிற்பது பிடிவாதம்
அறிவுள்ள முடிவில் விஞ்சி நிற்பது
தீர்மானம் !

இல்லையெனச்  சொல்லாது கையேந்திய எமனுக்கு
இரையாகும் வள்ளல்கள்
நாம் !

புதையுண்ட விதைகள்
முட்டி மோதித் துளிர்விட்டன
நம்பிக்கையில்...!

பாதிப்புக்கு உள்ளாகும் போது
மருந்து கூட
நஞ்சாகிறது ......!

ஏற்றமும் மாற்றமும் தரும்... படி!
படி என்றாலே
ஏற்றம்தானே!




# இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்



**இரண்டாம் பரிசு**

**கோ. பாலகிருஷ்ணன்**

இரண்டாம் ஆண்டு, வணிக மேலாண்மை (பொது நிர்வாகம்), விஸ்டாஸ்.

## முன்னுரை

உலகில் தோன்றிய மொழிகளில் மூத்த மொழியாகத் திகழ்வது நமது தாய்மொழியாம் தமிழ். குமரிக் கண்டத்தில் தோன்றிய முதல் மனிதன் பேசிய மொழி தமிழ் மொழி. நம் தமிழ் மொழி சிறந்த இலக்கியங்கலையும் இலக்கணங்களையும் கொண்டு உள்ளது. தமிழர்கள், அவர்களின் தாய் மொழியை உயிருக்கும் மேலாக நினைத்துப் போற்றி வாழ்ந்து வந்துள்ளனர். அவற்றை இக்கட்டுரையில் விரிவாகப் பார்ப்போம்.

## மொழிப்போரும், தமிழ்க் காப்பு இயக்கமும்

ஆங்கிலேய ஆட்சி காலத்தில் இருந்தே வேற்று மொழியை தமிழ் மொழி மீது திணிக்கும் முயற்சி நடைப்பெற்றுக் கொண்டு இருக்கிறது. 1937 ஆம் ஆண்டு சென்னை மாகாணத்தில் வேற்று மொழி ஒன்றை, பயிற்று மொழியாகவும், சிறிது காலத்தில் ஆட்சி மொழியாகவும் ஆக்கும் சட்டம் ஒன்று வந்தது. அதை எதிர்த்து, மொழிப்போர் தியாகிகள் இல. நடராசரும், தாளமுத்தும் போராடி தன் இன்னுயிரை விட்டனர். நமக்கு கிடைத்த தரவுகளில், தமிழ் மொழியை உயிர் மொழியாகக் கருதிய வரலாறு இங்கிருந்து தொடங்குகிறது.

## தமிழுக்கோர் தனித்தன்மை

"ழ்" என்ற உச்சரிப்பு எழுத்து உலகில் வேறு எந்த மொழியிலும் கிடையாது. இது வெறும் உச்சரிப்பு கிடையாது. உலகில் தோன்றிய மொழிகளில் செம்மொழியாம் தமிழின் உயிர்ப்பு உச்சரிப்பு. ஏன் என்றால், ழ என்ற உச்சரிப்பு உடலில் உள்ள அனைத்து உறுப்புகளையும் புத்துணர்ச்சி ஊட்டும் உச்சரிப்பு. இதனால் மனித வாழ்வு நீளும் என ஒரு ஆய்வுக் கட்டுரை கூறுகிறது.

உச்சரிப்பில் உயிர் ஊட்டும் உணர்வு மொழி, உயிர் காக்கும் உலகு மொழி!

## என் சாம்பலும் தமிழ் மணந்து வேக வேண்டும்!

தமிழ் மீது காதல் கொண்ட கவிஞர்களையும் உரை ஆசிரியர்களையும் பொது மக்களையும் அதிகம் கொண்டவர்கள் இங்கு உள்ளனர். அதில் ஒருவர் கூறுகிறார் நான்





இறக்கும் தருவாயில் தமிழ் நூல்களைக் கற்க வேண்டும். நான் இறந்த பின்பு அதில் தமிழ் மணம் வீச வேண்டும் என்கிறார். சாகும் போதும் தமிழ் படித்துச் சாக வேண்டும் ! என் சாம்பலும் தமிழ் மணந்து வேக வேண்டும்!

**யாமறிந்த மொழிகளிலே!**

மகாகவி பாரதியார் பன்மொழிப் புலமை பெற்றவர். அவர் ஆங்கிலம், தமிழ், பிரஞ்சு, தெலுங்கு எனப் பல மொழிகளைக் கற்று இருந்தார். ஆனால் அவர், நான் பல மொழிகளைக் கற்று இருந்தாலும் இனிமையான மொழி எது என ஆராய்ந்தால் தமிழுக்கு இணை வேறு ஒன்றும் இல்லை என்று கூறுகிறார்.

**செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே**

செம்மையான மொழியாகக் கருதப்படும் தமிழில் இலக்கண வளம் மிகுந்து காணப்படுகிறது. இங்கு உள்ள மக்கள் தமிழில் சிறந்து விளங்குகின்றனர். வள்ளுவன் தந்த முப்பாலைக் குடித்து இருக்கின்றனர். இவர்கள் தமிழ் மொழிக்குப் பெருமை சேர்க்கின்றனர் என மகாகவி பாரதியார் கூறுகிறார்.

**தனித்து இயங்கும் தன்மை**

உலகில், ஆராயிரத்திற்கும் அதிகமான மொழிகள் உள்ளன. அவற்றில் இலக்கண இலக்கிய வளமுடைய மொழிகள் மூவாயிரம். உலகமயமாதலுக்குப் பின்பு, எல்லா மொழிகளிலும் மொழிக்கலப்பு ஏற்பட்டு உள்ளது. அந்த அந்த மொழிகளின் முக்கிய வேர்ச் சொற்கள் அழிந்து உள்ளன. இதனால் மற்ற மொழிகள் இன்றையச் சூழலில் தனித்து இயங்கும் தன்மை அற்றது. ஆனால் தமிழ் மொழியில் வேற்று மொழிக்கலப்பு இருந்தாலும், அவற்றை நீக்கினால், தமிழ் மொழி தனித்து இயங்கும் தன்மை கொண்டது.

தனித்து இயங்கும் தன்மை கொண்ட தனித்தமிழே! உனக்குத் தாகமொன்றும் இல்லை! திருவள்ளுவராண்டின் தொடக்கத்தில் முப்பாலைக் குடித்து, சங்க காலத்தில் சங்கப் பாடலைப் பருகினாய், பக்தி இலக்கிய காலத்தில் ஆராதனை செய்தாய் நவீனத் தமிழ்க் காலத்தில் அமைதியாய் இருக்கிறாய், தாகமொன்றும் இல்லை!

**உலகப்பொது மறையும் உலக நீதியும்**

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய மூத்த மொழியாக இருந்தாலும், கி.மு மூன்றாம் நூற்றாண்டில் தோன்றிய திருக்குறள் தமிழ் மொழியை உலகறியச் செய்தது. இந்த உலகிற்கு முக்காலத்திற்கும் வேண்டிய நிதியை முப்பாலில் தருவதுதான் திருக்குறள். இந்த முப்பாலில் இல்லாததும் இல்லை, இருப்பதிலும் குறை என்று ஒன்று இல்லை. திருக்குறள் தமிழ் மொழிக்கு அடையாளமாக உலக அரங்கில் உள்ளது.

முக்கனியாய் முப்பாலைத் தந்தாய், மூவுலகிலும் பிறர் வியக்கும் படி செய்தாய், மூத்த மொழியாய் பிறந்து, மூத்தோர் மொழியே மூதுரையில் வழங்கினாய், இன்று என் முதல் காதலியாய் வாழ்கிறாய்! தமிழே நீ என் மூச்சுக் காற்றில் கலந்தாய்!

**தமிழுக்குத் தலையே கொடுத்தல்**

தமிழகத்தில் வளமிகுந்த பகுதியைக் குமண வள்ளலின் தம்பி ஆட்சிபுரிந்து வந்தார். சூழ்ச்சி செய்து தம்பியின் நெஞ்சில் நஞ்சை விதைத்தனர் அமைச்சர்கள். இதனால் குமணனின் தலையை வெட்டி வருபவருக்கு பொற்காசு என அறிவித்தார்.

காட்டில் இருந்த குமண வள்ளலைப் புகழ்ந்துப் பாடி, பரிசில் பெற புலவன் சென்றார், பாடினார், குமண வள்ளல், புலவரின் தமிழ் வளத்தில் மயங்கிப் போனார். பரிசு அளிக்க எந்தப் பொருளும் இல்லாததால் தலையைக் கொடுத்தார். என் தலைக்குப் பொற்காசு அறிவித்து உள்ளார் அரசர், என் தலையை வெட்டிச் சென்று அரசரிடம் கொடுத்தால் பொற்காசு கிடைக்கும் என்று கூறித் தமிழுக்குத் தலையைக் கொடுத்தார் குமண வள்ளல் எனப் புலவர் பாடினார்.

தமிழுக்குத் தலையைக் கொடுக்கும் தாராள பிரபுக்களைக் கொண்டு இருக்கும் காலம் வரைத் தமிழ் இருக்கும்.

**அதியமானும் நெல்லிக் கனியும்**

தமிழகப் பகுதியை ஆண்டு வந்த மன்னரான அதியமானுக்கு ஒரு சாகா வரம் படைத்த நெல்லிக்கனி கிடைக்கிறது. அதை அவன் உண்ணாமல் தமிழில் சிறந்து விளங்கிய ஔவையாரிடம் கொடுக்கிறார்.

அதற்கு ஔவையார் கேட்கிறார், நீதியில் தலைசிறந்து விளக்கும் மன்னனான நீ உண்ணாமல் என் இடம் கொடுக்கிறாயே என நகைச்சுவையாய் சிரிக்கிறார்.

அதற்கு மன்னன், என்னைப் போல் நீதியில் சிறந்த ஆயிரம் மன்னர் உருவாகலாம். ஆனால் உன்னைப் போல் 'தமிழில் சிறந்த ஒரு புலவரை உருவாக்க முடியாது, ஆகையால் நீங்கள் உண்ணுங்கள் என்கிறார்.

தமிழுக்குச் சாகா வரம் கொடுத்த அதியன் இருக்க, தமிழ் இனி மெல்லச் சாகும் என சொல்லலாமா?

இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்

தமிழுக்கு அமுதென்று பேர்! இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!

தமிழ்ப் பாடல்கள், உரைநடைகள், சிறுகதைகள் இயற்றுவதில் சிறந்து விளங்கியவர் பாரதிதாசன். அவர் தமிழ் மொழியை அமிர்தம் என்று கூறுகிறார். தமிழ் எங்கள் உயிருக்கு இணையானது என்றும் கூறுகிறார்.

தமிழ் மொழியை மதங்களிலே சாய்க்காமை வேண்டும். இலவச நூற்கழகங்கள் எவ்விடத்தும் வேண்டும். எங்கள் தமிழ் உயர்வென்று நாம் சொல்லிச் சொல்லித் தலைமுறைகள் பல கழித்தோம் குறைகள் ஏதுமில்லை என்கிறார்.

**முடிவுரை**

இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர் என்ற பாரதியாரின் மீது மிகுந்த பற்று கொண்ட பாரதிதாசனின் வழி நின்று தமிழ் மக்கள், தமிழ் மொழியை எவ்வாறு போற்றி வளர்த்தனர் என விரிவாகப் பார்த்தோம்.






# பெரிதினும் பெரிது கேள்
# எது பெரியது?

**அ.பாலாஜி.**
வணிகவியல் (கணக்கு & பொருளாதாரம்). மூன்றாம் ஆண்டு

**இரண்டாம் பரிசு**



வீரன் தன் வாளின் மீது வைத்த
நம்பிக்கை பெரியதா?

அறிஞர் தன் அறிவின் மீது வைக்கும்
நம்பிக்கை பெரியதா?

விவசாயி தன் பயிரின் மீது வைக்கும்
நம்பிக்கை பெரியதா?

பறவைத் தன் இறகு மீது வைக்கும்
நம்பிக்கை பெரியதா?

மாணவன் தன் கல்வி மீது வைக்கும்
நம்பிக்கை பெரியதா?

நோயாளி மருத்துவர் மீது வைக்கும்
நம்பிக்கை பெரியதா?

ஒரு பயணி தன் ஓட்டுநர் மீது வைக்கும்
நம்பிக்கை பெரியதா?

காதலன் தன் காதலி மீது வைக்கும்
நம்பிக்கை பெரியதா?

ஒரு தொழிளாளி தன் முதலாளி மீது வைக்கும்
நம்பிக்கை பெரியதா?

ஆசிரியர் தன் மாணவன்மீது வைக்கும்
நம்பிக்கை பெரியதா?

எது பெரியது?
ஒரு தாய் தன் குழந்தை
மீது வைக்கும் பாசத்தைவிட
எதுவும் பெரியது இல்லை!!!

# மொழிகள் புலம் - தமிழ்த்துறை
# வேல்ஸ் முத்தமிழ் விழா - 2025
# இலக்கியப் போட்டிகளில் வெற்றிபெற்றோர்

## கட்டுரைப் போட்டி

தலைப்பு : **''இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!''**

| | |
|---|---|
| முதல் பரிசு | செல்வி **மா. நாகபிரபா**, மூன்றாம் ஆண்டு, வான்பரப்பியல் (IIIBScAviation) |
| இரண்டாம் பரிசு | செல்வன் **கோ. பாலகிருஷ்ணன்**, முதுகலை இரண்டாம்ஆண்டு, வணிக மேலாண்மையியல் (II MBA) |
| மூன்றாம் பரிசு | செல்வி **பி. பிரின்ஸி**, முதலாம் ஆண்டு, உயிர்நுட்பவியல் (IYear BSc Bio Tech) |

## பேச்சுப் போட்டி

தலைப்பு : **''கெட்ட போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்''**

| | |
|---|---|
| முதல் பரிசு | செல்வி **மை. ஜெய்அஷ்மிதா**, முதலாம் ஆண்டு MBA Aviation |
| இரண்டாம் பரிசு | செல்வன் **ஜே. பெரோஸ்ஷெரிம்**, மூன்றாம் ஆண்டு, Law |
| மூன்றாம் பரிசு | செல்வன் **அ. பாலாஜி**, மூன்றாம் ஆண்டு, B.Com A&F 'A' Sec |

## பாட்டுப் போட்டி

தலைப்பு : **''பாரதியார், பாரதிதாசன் பாடல்கள், நாட்டுப்பற்று, மொழியுணர்வு, நாட்டுப்புறப் பாடல்கள்''**

| | |
|---|---|
| முதல் பரிசு | செல்வன் **ஏ.வின்செண்ட்**, மூன்றாம் ஆண்டு, B.Com (CS) 'A' |
| இரண்டாம் பரிசு | செல்வி **க. சாய்நிகிலா**, முதலாம் ஆண்டு, B.Ed, |
| மூன்றாம் பரிசு | செல்வி **லி. நிதர்ஷனா**, முதலாம் ஆண்டு, B.Sc., Animation |

## கவிதைப் போட்டி

தலைப்பு : **''பெரிதினும் பெரிது கேள்''**

| | |
|---|---|
| முதல் பரிசு | செல்வன் **உ.அ. அப்துல்ஹாரித்**, முதலாம்ஆண்டு, B.Sc., Aeronautical Science |
| இரண்டாம் பரிசு | செல்வன் **அ. பாலாஜி**, மூன்றாம் ஆண்டு B.Com A&F 'A' Sec |
| மூன்றாம் பரிசு | செல்வன் **க. ஹரிஹரன்**, முதலாம் ஆண்டு, உயிர்நுட்பவியல் (I Year BSc Bio Tech) |

## ஓவியப் போட்டி

தலைப்பு : **''வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்'' இயற்கைப் பாதுகாப்பு**

| | |
|---|---|
| முதல் பரிசு | செல்வி **பா.சு. ஸ்ரீஜிஷா**, முதலாம் ஆண்டு, B.Sc., Animation |
| இரண்டாம் பரிசு | செல்வி **ப. கமலேஷ்**, முதலாம் ஆண்டு, B.Sc., Computer Science |
| மூன்றாம் பரிசு | செல்வி **ஏ. வின்செண்ட்**, மூன்றாம் ஆண்டு, B.Com (CS) 'A' |